29061

# கயற்கண்ணி மாலை

[அங்கயற்கண்ணி மாலை, கடம்பவனவல்லி பதிகம்,
ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி என்பவற்றுடன்]

20758

(20758)

மகாமகோபாத்தியாய

**டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்**



மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

திருவான்மியூர் — சென்னை-41

1970

# கயற்கண்ணி மாலை

[அங்கயற்கண்ணி மாலை, கடம்பவனவல்லி பதிகம்,
ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி என்பவற்றுடன்]

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்



மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்

திருவான்மியூர் — சென்னை-41

1970

முதற் பதிப்பு
நவம்பர், 1970

எவர்ரெடி பிரிண்டர்ஸ், தி. நகர், சென்னை-17.

விலை ரூ. 1-25

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | i |
| 2. | கயற்கண்ணி மாலை | 1 |
| 3. | அங்கயற்கண்ணி மாலை | 36 |
| 4. | கடம்பவன வல்லி பதிகம் | 48 |
| 5. | ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி | 52 |
| 6. | செய்யுள் முதற் குறிப்பகராதி | 56 |

## நன்றியுரை

பழந்தமிழ் இலக்கியங்களை நன்கு பதிப்பித்து உலகுக்கு உதவுவது இந்த நூலகத்தின் தலையான குறிக்கோளும் பணியும் ஆகும். டாக்டர் ஐயர் அவர்கள் அயராது சேகரித்து வைத்த பல அரிய தமிழ் நூல்களை இந்நூலகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அவற்றைச் சிறிதளவேனும் பதிப்பித்து அச்சிட்டு வெளியிடப் போதுமான பொருள் வசதி இல்லை. இந்த நிலையில் வைதிக சமயத்தையும் கல்வியையும் பரப்புவதற்கு 1866-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட திருமயிலை ஆர்ய மத சபையினர், இந்நூலகத்துக்குச் சென்ற மார்ச்சு மாதம் ரூபாய் ஐந்நூறு வழங்கியதைப் பெரிதும் பாராட்டுகிறோம். நல்லவர்கள் அடங்கிய அந்தச் சபையின் நிர்வாகிகளுக்கு இந்த நிலையம் நன்றி செலுத்துகிறது.

இந்தப் பண உதவியைக் கொண்டு இந்த நூல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது. இதில் அடங்கிய பனுவல்கள் தெய்வ பக்தியையும் தமிழ் மொழியையும் வளர்க்கும் பெற்றியை உடையன. தமிழுலகத்திற்குத் தனித்தெய்வமான ஸ்ரீ அங்கயற்கண்ணி தேவியின் அருள் எங்கும் நிலவுக!

இந்தப் பொருளுதவியைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த திரு ரா. விசுவநாத ஐயர் அவர்களுக்கு நன்றி உரித்தாகும். இந்நூலை நன்கு ஆராய்ந்து குறிப்புரையும், ஆராய்ச்சி உரையும் குறுகிய காலத்தில் எழுதி உதவிய திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் இந் நூலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது,

இந் நூலைத் தமிழுலகம் ஏற்று மேன்மேலும் ஆதரவு கொடுப்பின் இதைப் போன்ற அரிய தமிழ் நூல்களை வருங்காலத்தில் அதிகமாக அச்சிடும் பணியை இந் நூலகம் மகிழ்ச்சியுடன் மேற்கொள்ளும்.

15–10–70
சென்னை–41

நல். முருகேச முதலியார்
செயலர்
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம்

# கயற்கண்ணி மாலை

## காப்பு

(நரவு கொச்சகக் கலிப்பா)

செம்மைவள மல்கு திருக்கூட லங்கயற்கண்
அம்மை யடியிணையை யன்பினுடன் யான்பாடத
தம்மை மறந்த தபோதனர்முன் வந்தருளும்
வெம்மைதவி ரருட்சித்தி வேழத்தைப் போற்றுவமே

## நூல்

(கட்டளைக் கலித்துறை)

1. தடையேனைத் தீயவர்ச் சார்ந்துதுன்
மார்க்கஞ் சரிக்கவிழை
நடையேனை வஞ்சமுஞ் சூதும்பொல்
லாங்கு நறுமொறுப்பும்
உடையேனை நின்னை யொருகாலத்
தேனு முரைத்தறியாக்
கடையேனைக் காத்தரு டென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

காப்பு : திருக்கூடல் - மதுரை. அங்கயற்கண் அம்மை - மீனாட்சி. சித்தி வேழம்: இத்தலத்திலுள்ள விநாயகர்.

1. தடையேனை - பல தடைகளை உடைய என்னை. தீயவர் சார்ந்து - தீயவர்களைச் சார்ந்து. சரிக்க - செல்ல. நடையேனை - நடத்தை உடைய என்னை. நறுமொறுப்பு - பொருமை.

2. மாத்தரு நீழ லிடத்தா
ணிடத்து வளர்ந்தகிலம்
பூத்தருள் வாயருள் பூண்டருள்
வாயன்பர் புந்திவிழை
வீத்தருள் வாயன்பு சற்றுமில்
லேனையு மெண்ணலின்றிக்
காத்தருள் வாய்வையைத் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

3. நாவார நின்னை நவிலாது
சைவநல் லாரியர்சொல்
தேவார பாரணஞ் செய்யாது
வீணரைச் சேர்ந்தொழுகித்
தீவாய் நரகுக் கிரையாகு
வேனைத் தியங்கவிடேல்
காவாய் புனல்வையைத் தென்கூடல்
வாழும் கயற்கண்ணியே.

4. வேஞ்சின மாதி மிகுத்தே
சிதடரை மேவிநிதம்
தாஞ்சிவ பூசை செயாதே
திரியெனைச் சார்ந்தருள்வாய்
வாஞ்சிய மாதித் தலந்தோறு
மேவிய வள்ளறனைக்
காஞ்சியிற் பூசிக்குந் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

2. மாத்தரு நீழல் இடத்தான் - காஞ்சிபுரத்தில் மாமரத்தின் நிழலில் உள்ளவன். இடத்து - வாம பாகத்தில். ஈந்தருள்வாயென்பது எதுகை நோக்கி வலித்தது. எண்ணல் இன்றி - என் குற்றங்களை எண்ணுதல் இல்லாமல்.

3. சைவம் நல் ஆரியர் - சைவ சமய ஆசாரியர்கள். தேவாரம் என்றும் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றையும் கொள்க. பாரணம் - பாராயணம்.

4. வேம் சினம் - உள்ளம் வெப்பமுற்றுத் தோன்றும் சினம். சினம் ஆதி என்றது, காமம், லோபம் மோகம், கோபம், மதம், மாச்சரியம் என்பவற்றை. சிதடரை - குருடரை ; இங்கே, ஞானக்கண் இல்லாதவரை. தாம் - மனம் விரும்பித் தாவுகின்ற. திரிகின்ற என்னை. வாஞ்சியம் - சோழ நாட்டிலுள்ள திருவாஞ்சிய மென்னும் சிவத்தலம்.

5. படித்தேன் படித்தவை சொல்லும்
திறமை படைத்தலின்றித்
துடித்தேனி னன்பர்கள் போலே
யெவரும் சொலும்பொருட்டு
நடித்தே னினிச்சகி யேனென்னைக்
காத்தரு ளாரணிபூங்
கடித்தே னுகுபொழிற் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

6. வஞ்சன் பிறரை யிகழ்ந்தேசுந்
தீமை மலிந்தியலும்
நெஞ்சன் கொடியரைக் கொண்டாடி
வாடுபு நின்னைவிட்ட
தஞ்சனென் றுலுநின் மஞ்சனன்
றேவெற் றளரவிடேல்
கஞ்சன் புகழ்வுறு தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

7. வாரணி கொங்கை மடவார்
கலவி மயலிற்பட்டே
தாரணி யேசத் தளர்வேனைத்
துன்பிடைத் தள்ளிவிடேல்
நாரணி யாருயிர் நாயக
மேமுன் நரலைதந்த
காரணி கண்ட ரிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

5. ''இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்ற, துணர விரித்துரையா தார்'' (குறள், 650) என்பதை நினைந்து, 'படித்தவை சொல்லுந் திறமை படைத்தலின்றித் துடித்தேன்' என்றார். நடித்தேன்: ''நாடகத்தால் உன் அடியார் போல்நடித்து'' (திருவாசகம்). கடி - நறுமணமுடைய.

6. வாடுபு - வாடி. தஞ்சன் - எளியவன். மஞ்சன் - மைந்தன்; ''நானுனக்கு மகனலனோ'' (திருவருட்பா). எற்றளரவிடேல் - என்னைத் தளரவிடாதே, கஞ்சன் - தாமரையில் வாழும் பிரமன்.

7. வார் - கச்சு. துன்பிடை - துன்பத்தில். நரலை - கடல். கார் - நஞ்சு; ஆகுபெயர்.

8. நிந்தனைக் கொள்கல மானேனை
நீசனை நேயமிலாப்
பந்தனைப் பாவியை மக்கட்
பதடியைப் பார்த்தருள்வாய்
சிந்தனை வாக்கினுக் கெட்டாத
சிற்பரன் றேவிசெவ்வேற்
கந்தனை யீன்றரு ளன்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

9. பண்ணே னெனினும் நினைத்துதி
பூசனை பண்ணிப்பின்னர்
உண்ணே னெனினு முனதடி
யார்தமக் குற்றசெய்ய
நண்ணே னெனினும் நினைவலஞ்
செய்து நலமடையக்
கண்ணே னெனினு மருள்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

10. சையந் தனக்கு நிகராகும்
யான்செ யதன்மமிந்த
வையந் தனக்குப் பெரும்பார
மாமென் வடிவமந்தோ
உய்யந்த மார்க்க மறியா
துழிதரு கிற்குமிந்தக்
கையன் றனைவிட் டிடாதேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

8. கொள்கலம் - இருப்பிடம். பந்தனை - பந்தத்தை உடைய என்னை. மக்கட் பதடி - பயனில சொல்லுதலால் மக்களுட் பதர் போன்றவன்; "பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல், மக்கட் பதடி எனல்" (குறள், 196).

9. துதி பண்ணேனெனினும். பூசனை பண்ணிப் பின்னருண்ணேன்: "உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்" (தேவாரம்). உற்ற - ஏற்ற பணிவிடைகளை. கண்ணேன் - நினையேன்.

10. சையம் - மலை. நான் செய்த அதன்மங்கள் மலைக்கு ஒப்பாகும்; என் வடிவம் பூமிக்குப் பாரமாகும். உய் அந்த மார்க்கம் - அந்தச் சிறந்த சன்மார்க்கத்தை; அந்த : உலகறி சுட்டு. உழிதருகிற்கும் - அலையும். கையன் - இழிந்தவன்.

11. பெரியா னெவனம்மி னென்றே
தருக்குபு பேரறத்தில்
தரியா துழலும் தமியனை
யாளத் தகுமுனக்கே
கிரியா ளரசன் றவத்தா
லுதித்தருள் கேகயமே
கரியா னனத்தனைத் தந்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

12. மெய்யா வுரைக்கின் றனா
லவையிடை மேவுதற்கும்
நையாத செம்பொருட் பாவோது
தற்கு நவிலுதற்கும்
எய்யா துழலுவ னின்னன்றி
யோர்துணை யானறியேன்
கையா வமுதக் கடலேதென்
கூடற் கயற்கண்ணியே.

13. மாணாத புல்லர்கள் கூட்டங்
கெழுமி மகிழ்ந்துநின்னைப்
பேணாத நாயிற் கொடியே
னெனினும் பெரிதுமஞ்சி
நாணாது நின்னைச் சரண்புக்
கமையினிந் நாயினுக்குக்
காணாத காட்சி யருள்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

11. நம்மின் - நம்மைக்காட்டிலும். தருக்குபு - செருக்கடைந்து. தரியாது - தங்காமல். தமியனை - துணையின்றித் தனியாகவுள்ள அடியேனை. கிரி ஆள் அரசன் - மலையரசனாகிய இமவான். கேகயமே - மென்மையால் மயிலைப் போன்றவளே. கரி ஆனனத்தன் - யானை முகமுடைய விநாயகன்.

12. அவையிடை - நல்லோர் கூடிய சபையில். நையாத - குற்றத்தால் நலிவுபடாத. செம்பொருள் - செம்மையான பொருளையுடைய. பா ஓதுதற்கும் - பிறரியற்றிய பாக்களைப் பலகாலும் படிப்பதற்கும். நவிலுதற்கும் - நானே புதிய பாடலைச் சொல்லுவதற்கும். எய்யாது - அறியாமல். நின் அன்றி - நின்னை அல்லாமல். கையா - கைப்புச்சுவை யில்லாத.

13. மாணாத - சிறப்பைப் பெறாத. புல்லர்கள் - இழிதகைமை உடையவர்கள். கெழுமி - பொருந்தி. பேணாத கொடியேன், நாயிற் கொடியேன். காணாத - இதுகாறும் அடியேன் காணாத.

14. இன்னம்ப ராதி யிடந்தோறு
நாளு மெழுந்தருளும்
நின்னன் பருக்குப்பிச் சாடன
நாமமென் நீக்கிலை நீ
முன்னம் படிதனை யீந்து
மிதனை மொழிந்திடுவாய்
கன்னன் மொழியுடைக் கிள்ளாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

15. மருவழி யாத்தளிர் மாநிழ
லூடென்றும் வாழ்பவன்சொல்
இருபடி முன்ன மளித்தா
னெனின்மற் றியைபறச்சொல்
ஒருபடி நீயளித் திட்டதென்
னேயிஃ துரைத்தருள்வாய்
கருவழித் தாளு மமுதேதென்
கூடற் கயற்கண்ணியே.

16. எல்லா வுலகு மளித்தர
சாளு மியல்புடைநீ
மல்லார் திணிபுயப் பாண்டிய
னுட்டினை மட்டுமணி
வில்லார் முடியணிந் தேயர
சாளும் விதமென்கொலோ
கல்லார்க் கணுகருந் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

14. இன்னம்பர்: சோழ நாட்டில் உள்ள ஒரு சிவத்தலம். நின் அன்பர் என்றது சிவபிரானை. படிதனை என்றது இருநாழி நெல்லை. கச்சியில் சிவபெருமான் உமாதேவியாருக்கு இருநாழி நெல்லைத் தந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கச் செய்தான் என்பது புராண வரலாறு. அறப்பெருஞ் செல்வியாக இருந்தும் உன்னுடைய நாயகனுக்குள்ள பிக்ஷாடனர் என்ற பெயரைப் போக்கவில்லையே, இதன் காரணம் என்ன என்றபடி. கன்னல் - கரும்பு. கிள்ளாய் - கிளியைப் போன்றவளே.

15. மரு - நறுமணம். மாநிழல் ஊடு என்றும் வாழ்பவன் - கச்சி ஏகம்பர். சொல் - நெல். இருபடி - இரண்டு படி. மற்று: அசை. இயைபு அற - பொருத்தம் அறும்படி. சொல் - சொல்லுகின்ற. ஒரு படி- ஓர் உலகத்தை. இறைவுன் இரண்டு படியை அளிக்க நீ ஒரு படியை அளித்தாய் என்பது நயம். கரு - பிறப்பு.

16. மல் ஆர் - மற்போர் புரியும் செயல் நிறைந்த. திணி புயம் - செறிந்த தோள். மணி வில் ஆர்- நவமணிகளின் ஒளி பொருந்திய. உலகம் எல்லாவற்றையும் பாதுகாத்தருளும் அகிலாண்டேசுவரியாகிய நீ மீனுட்சியாகப் பாண்டியன் நாட்டினைமட்டும் ஆட்சிபுரிந்தது ஏன் என்றபடி.

17\. மலையத் துவச வழுதிக்குப்
பின்னலை வாரிதிசூழ்
வலையத்தை நீபரித் தாண்டருள்
செய்த வகையறிந்தும்
அலையத்தை மேவு மறிவோ
ரபலையென் பாரதென்னே
கலையத்தை நானவி லேன்வையைக்
கூடற் கயற்கண்ணியே.

18\. புவிபாலர் முன்னம் பொருந்தியஞ்
சாது புகன்றிடவும்
குவியாதென் புந்தி குசை நுனி
போன்மிகக் கூர்ந்திடவும்
தவியாது கேட்பவர்க் கெல்லா
மினிதுறச் சாற்றவுநாற்
கவிபா டவுமருள் செய்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

19\. தனிவா யமல னிடம்பிரி
யாதென்றுந் தங்கியநீ
பனிவா யிமயப் பருப்பத
ராசன்றன் பாவையென

---

17\. மலையத்துவச வழுதிக்குப்பின் - நின்னுடைய தந்தையாகிய மலயத்துவச பாண்டியனுக்குப்பின். வாரிதிசூழ் வலையம் - பூமி. பரித்து - தாங்கி. அலை அத்தை மேவும் அறிவோர் - கடலை உவமையாகப் பொருந்தும் அறிவை உடையவர் ; அலை - கடல் : ஆகுபெயர்; அத்தை : அஃதையென் பதன் திரிபு. அபலை - பெண் ; பலமில்லாதவள். உலகத்தையே தாங்கும் வலிமைபெற்ற உன்னைப் பலமில்லாதவள் என்ற பொருளைப் பெற்ற அபலை என்று அறிஞர்கள் சொல்லக் காரணம் என்ன. கலை அத்தை - கலையாகிய அஃதை. நவிலேன் - பயிலேன்.

18\. புவிபாலர்-மன்னர். புகன்றிட-பாக்களையும் பொருளையும் சொல்ல. குவியாது - வாடாமல். புந்தி - அறிவு. குசை நுனி - தருப்பையின் நுனி ; குசாக்கிரபுத்தி என்பது வழக்கு. கூர்ந்திடவும் - நுட்பம் பெறவும். நாற் கவி - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளுமாம்.

19\. தனி வாய் - ஒப்பின்மை பொருந்திய. இடம் - இடப் பாகம். விறல் - வலிமை. பஞ்சவன் - மலையத்துவச பாண்டியன். பாவை - மகள். கனிவாய் - கொவ்வைக் கனிபோன்ற வாய். இறைவனிடம் என்றும் பிரியா மல் இருந்தே இமவானுக்கும் பாண்டியனுக்கும் மகளாக வந்தது எப்படி

நனிவாய் விறற்பஞ்ச வன்பாவை
யென்ன நணுகியதென்
கனிவாய் மலர்ந்தருள் செய்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

20. நாவலன் ரேழமை வாய்ந்தே
கவிஞர்க ணுயகனும்
பாவல னென்றும் வருவா
னளகைப் பதியரசற்
காவல னுயர சர்க்கர
சாயு மணைகுவனின்
காவலன் யாவுநின் சீரேதென்
கூடற் கயற்கண்ணியே.

21, புனல்வாய் பவர்சடைச் செம்மேனிப்
பன்னகப் பூண்டிசைத்தூ
சனல்வாய் விழிமுத் தலைவா
யயிற்படை யண்ணலென
இனல்வாய் மலையத் துவசன்
பெருமகிழ் வெய்துறவெங்
கனல்வாய் உதித்தனை யன்றேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

என்றபடி. இதில் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் செய்த திருவிளை யாடல் குறிக்கப் பெற்றது.

20. நாவலன் - சுந்தரமூர்த்திநாயனுர்; அவருக்குத் தம்பிரான் தோழர் என்பது ஒரு பெயர். பாவலனுகி வந்தது - நக்கீரரோடு வாதிடும் பொருட்டு வந்தது. அளகைப் பதி அரசற்கு - குபேரனுக்கு. ஆவலன் - நண்பன். காவலன் - இங்கே, கணவன். சிவபெருமான் சிறந்த புலவனுனதும், அரச னுனதும் உன்னுடைய சிறப்பினுல்தான் என்றபடி. ‘ஏர்பிடித்தவன் என்ன செய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்’ என்ற பழமொழியை இது நினைப் பிக்கிறது.

21. பவர் சடை - கொடிபோன்ற சடை. பன்னகப் பூண் - பாம்பாகிய அணிகலன். திசைத்தூசு-திசைகளாகிய ஆடை; திகம்பரம். அனல் வாய்ந்த விழி; நெற்றிக்கண். முத்தலைவாய் அயில் - திரிசூலம். சடைமுதல் படை வரைக்குங் கொண்ட அண்ணல் எனக் கூட்டுக. நமக்கு மருகனுக வந்தவன் இத்தகைய அண்ணல் என்று மலையத்துவசன் பெருமகிழ் வெய்துற என இசை யெச்சத்தால் வேண்டிய சொற்களை வருவித்து முடிக்க. இனல் - இன்னல்; துன்பம். தக்க மருகன் வரவில்லையே என்று துன்புற்றுன். வெம் கனல்வாய் - புத்திரகாமேட்டியாகஞ் செய்த தீயில். தடாதகைப் பிராட்டியார் திருவவதாரத்தைக் குறித்தது. அடுத்த பாட்டும் அஃதே.

22. முனைவாய்க் கவைச்சிகை யங்கியி
னூடு முளைத்ததுதான்
தினைவாய் புனத்துச் சிலம்பன்
மகிழச் சிமயமலைச்
சுனைவாய்ச்செந் தாமரை யூடுறு
தோற்றந் துலக்கியதால்
கனைவாய் அளிமுரல் பூங்காத்தென்
கூடற் கயற்கண்ணியே.

23. சென்னி யிடைவிண் ணதிசூடு
மண்ண றிருக்கரத்து
வன்னிவைத் தானென்ன வோநீயுஞ்
செங்கையில் வன்னிகொண்டாய்
உன்னி வழிபடு வார்க்கொரு
வாதரு ளுத்தமியே
கன்னி யிளங்குயி லேபுனற்
கூடற் கயற்கண்ணியே.

24. வரைவேந்தன் புத்திரி யாய்மரை
யூடுமுன் வந்ததற்கும்
தரைவேந்தன் புத்திரி யாய்த்தழ
லூடு சனித்ததற்கும்

---

22. முனைவாய் - முனை வாய்ந்த. கவைச்சிகை - கிளையாக அமைந்த கொழுந்து. அங்கி - தீ. முளைத்தது - மலையத்துவசன் யாகத்தில் தோன்றியது. புனத்து - கொல்லைகளையுடைய. சிலம்பன் - இமவான். சிமயம் - சிகரம். தாமரையூடுறு தோற்றம் - பார்வதி தேவியார் இமாசலத்தில் ஒரு பொய்கையில் தோற்றிய தாமரையில் திருவவதாரம் செய்தது. துலக்கியது - விளக்கியது. மீனாட்சி தீயில் தோன்றியது, பார்வதி செந்தாமரையில் தோன்றியது போல இருந்தது. தீக்குத் தாமரை உவமை. கனை வாய் - ஒலித்தலையுடைய. அளி - வண்டு. பூங்கா - மலர்ச் சோலை.

23. விண்ணதி - கங்கை. அண்ணல் - சிவபெருமான். வன்னி வைத்தான் - நெருப்பைக் கொண்டான். வன்னி கொண்டாய் - கிளியை ஏந்தினாய். வன்னி என்பதை இருபொருளிற் பயன்படுத்தினார். ஒருவாது - நீங்காமல்.

24. வரை வேந்தன் - இமவான். மரை - தாமரை. தரை வேந்தன் - மலையத்துவச பாண்டியன். நிரை வேந்து உரிமை-வரிசையாக வந்த அரசுரிமையை. உறும் - ஏற்கும்; பொருந்தும். ஆல் : அசை. இரண்டு அரசர்

நிரைவேந் துரிமைபெற் றேயர
சாள னினக்குறுமால்
கரைவேந்தர் போற்றும் பதத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

25. அறையணி சார லிமவான்
புரிந்த வருந்தவம்போல்
நிறையணி செல்வச் செழியற்
கிலைகொ னிகழ்த்திடுவாய்
மறையணி நின்மணங் காணுமை
யாற்பய வாரிவரு
கறையணி கண்ட ரிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

26. அனகப் பரமனுன் சாயற்கு
நெஞ்சக மஞ்சுமென்றே
பனகப் பணியையஞ் சாதணிந்
தானிதைப் பன்னியருள்
எனகத் துயர்ப்பிணிக் கோர்மருந்
தேயன்ப ரெய்ப்பில்வைப்பே
கனகச் சிலம்படித் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

களுக்குப் புத்திரியாய்த் திருவவதாரம் செய்ததற்கு ஏற்றபடி நீ அரசாண்டாய் என்பது கருத்து. கரை வேந்தர்-பிறரால் புகழ் சொல்லப் பெறும் வேந்தர். தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் இப்பாடலிலும் வந்துளது.

25. அறை - பாறை. நிறை அணி செல்வச் செழியற்கு - நிறைந்த அழகும் செல்வச் செழிப்புமுள்ள மலையத்துவச பாண்டியனுக்கு. இலை கொல்-அருந்தவமில்லையோ. மறை அணி-மந்திரங்களால் அணிபெற்ற. நின் மணம் காணுமையால் செழியற்கு அருந்தவம் இலைகொல்; மீனாட்சியின் திருமணத்தின் போது மலையத்துவச பாண்டியன் இல்லை என்பதை நினைத்தது, பயவாரி - பாற்கடல். கறை - நஞ்சம் ; ஆகுபெயர்.

26. அனகப் பரமன் - அனகனுகிய பரமசிவன்; அனகன் - பாவ மற்றவன். உன் சாயற்கு - உன்னுடைய மயில்போன்ற சாயலுக்கு ; சாயல் - மென்மை. பனகப்பணி - பன்னகமாகிய அணியை. பாம்பிற்கு மயில் பகை யாதலின் நின்னைக் கண்டு மயிலாக எண்ணிப் பாம்பு எந்தத் துன்பமும் விளைவிக்காது என்றே இறைவன் அதை யணிந்தான் என்றபடி. பன்னி யருள் - திருவாய் மலர்ந்தருள்வாயாக. என் அகத் துயர்ப்பிணிக்கு - அடியே னுடைய உள்ளத்திலுள்ள துயரமாகிய நோய்க்கு. எய்ப்பில் வைப்பு - இளைக்கும்போது பயன்படும் செல்வம்.

27. எண்ணி னயனத் தினுக்குப
மானங்க ளெண்ணிலவால்
மண்ணி னவற்றுட் கயலென்ன
தன்மம் வகுத்ததுவோ
பெண்ணின் மணிநின் றிருவிழி
யோடுறப் பெற்றமையால்
கண்ணின் மணியுறை பாவாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

28. முற்று தரவு படைத்தேநின்
பாத முளரிதனைப்
பற்று வனுதின மெண்ணுபு
போற்றுமிப் பாதகன்பாற்
சற்று தரவும் படைத்தா
யிலையித் தரணியுளோர்
கற்றுவென் பார்நினை யென்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

29 சீதங் கமழும் பிறையணி
செஞ்சடைச் செல்வரொடும்
ஏதங் கமழு மிருளாரென்
னுள்ளத் தெழுந்தருள்வாய்
வேதங் கமழும்செவ் வாயர்க்குப்
பாலருள் வித்தகியே
காதங் கமழும் பொழில்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

27. எண்ணின் - ஆராய்ந்து பார்த்தால். நயனத்தினுக்கு - திருவிழிகளுக்கு. உவமைகள் எண்ணில. என்ன தன்மம் வகுத்ததுவோ - என்ன புண்ணியம் செய்ததோ. நின் திருவிழியோடுற - நின்னுடைய அழகிய திருவிழிகளோடு உவமையாகச் சேர்த்துச் சொல்ல. பெற்றமையால் என்ன தன்மம் வகுத்ததுவோ என்று கூட்டுக. கயற்கண்ணி என்று எம்பெருமாட்டியின் கண்ணோடு கயலை இணைத்துச் சொல்லும் பேற்றை எண்ணியபடி.

28. முற்று ஆதரவு - நிறைந்த அன்பு. பற்று - பற்றி; புகலாக எனினும் ஆம். எண்ணுபு - எண்ணி. சற்றும் ஆதரவு என்று உம்மையைப் பிரித்துக் கூட்டுக. கற்று என்பார் - கன்றையுடைய பசு என்பார். யான் கன்றைப் போல நின்னைப் போற்றியும் நீ பசுவைப் போல அருள் செய்யவில்லை, ஆதலின் நின்னைக் கற்று என்பது எவ்வாறு பொருந்தும்.

29. ஏதம் - துன்பம். இருள் ஆர் - அறியாமை நிறைந்த. செவ்வாயர் என்றது திருஞானசம்பந்தப் பெருமானை.

30. அண்டார் புரஞ்செற்ற வெம்மானே
டுன்னை யபேதமென
விண்டார் சமழ்ப்புற நீகன்னி
யாகி விரிதிரைசூழ்
ஒண்டா ரணியை நெடுங்கால
மாண்ட வுதுவென் கொலோ
கண்டார் மொழியுடைக் கிள்ளாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

31. முன்ன மதனின் மணக்கோலங்
கண்டிட முப்புவனம்
மன்னு மனைவரும் வந்து
மகத்திய மாதவன்றுன்
என்னந்த வுத்தரத் தேகா
திருந்தன னென்றெய்வமே
கன்னங் கறுத்த குழலாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

32. செய்தவ மேது மறியே
னினைத்துதி செய்தறியேன்
வெய்தவ மாற்ற விழைவே
னினதருள் மேவுவனே

---

30. அண்டார் - பகைவராகிய திரிபுராதியர். விண்டார் - கூறியவர்கள். சமழ்ப்பு உற - நாணம் அடைய. உது - அந்தச் செயல். இறைவன் உன்னோடு வேறுபாடற்றவன் என்று சொல்லுவார் நாணுமாறு நீ அவனை விட்டுத் தனியே கன்னிகையாக வந்து உலகை ஆண்ட அந்தத் திருவிளையாடலுக்குக் காரணம் என்ன என்றபடி. கண்டு ஆர் - கற்கண்டைப் போன்ற.

31. முன்னமதனில் - முற்காலத்தில். என் - என்ன காரணம். உத்தரத்து - வடதிசைக்கு. கன்னம் கறுத்த - மிகக் கறுத்த ; வழக்குத்தொடர்.

நின் மணக்கோலம் காண மூன்று புவனங்களிலும் உள்ளவர்கள் வந்தும் அகத்தியமுனிவன் தென்னாட்டுக்கு வந்தவன் மீட்டும் வடக்கே ஏகாமல் இங்கேயே இருந்தான் ; இதற்குக் காரணம் என்ன என்றபடி. பாண்டி நாட்டின் உயர்வை எண்ணியே இருந்தான் என்பது குறிப்பு.

32. வெய்து அவம் ஆற்ற - வீணே பயனற்ற செயல்களைச் செய்ய. மை - மேகம். கோதண்ட வெற்பு - வில்லாகிய மேருமலையைக் கொண்ட ;

மைதவழ் கோதண்ட வெற்பண்ணல்
வாமம் வளர்கரும்பே
கைதவன் செய்தவப் பேறேதென்
கூடற் கயற்கண்ணியே.

33. மாட்சி பெறுகவி வல்லோர்கள்
யாரும் வணங்கியுனே
ஆட்சி யடைந்தனர் நாயடி
யேனு மதுநினைந்தே
நீட்சி பெறுமின் புறுகவி
பாட நிகழ்த்துதற்குக்
காட்சி யளித்தரு டென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

34. முளைமதி வேணிய னீயர
சாளு முறைமையுன்ன
தளைமணி மாட மறுகூடு
பாத வலர்வெதும்ப
வளைவிற்று மிந்தனம் விற்று
முழன்ற வகையென்கொலோ
களைதவிர்த் தாளு மமுதேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

சிவபெருமான் திரிபுர சங்காரம் செய்தபோது மேருவை வில்லாக வளைத்தான் என்பது வரலாறு. வாமம் - இடப்பாகம். கைதவன் - பாண்டியன்.

33. உனை வணங்கி. ஆட்சி - புலமையை ஆளும் விறலை. நீட்சி - [illegible] காலம்.

34. முளைமதி - பிறையை அணிந்த. மணி அளைந்த மாடம்; மணி - நவமணிகள்; அழகுமாம். மறுகு ஊடு - வீதியின் நடுவே. இந்தனம் - விறகு. களை - வினையினால் உண்டாகிய இளைப்பு.

நீ அரசியாக இருந்தும் உன் உயர்வை எண்ணுமல் சிவபெருமான் வீதியில் நடந்து வளையையும் விறகையும் விற்றுத் திரிந்தது ஏன் என்றபடி. இப்பாடலில் வளையல் விற்ற திருவிளையாடலும் விறகு விற்ற திருவிளை யாடலும் குறிக்கப்பெற்றன.

35. எல்லாஞ்செய் சித்த ரெனவேயக்
காலத் தெழுந்தருளும்
அல்லார் களத்தர்க்கிப் பொல்லானை
யாளுமென் றன்னவரோ
டுல்லாச மாக விருக்கும்
பொழுதி லுரைத்தருள்வாய்
கல்லார் தமையும் புரப்பாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

36. அற்பக னின்ற னடித்தா
மரையிணைக் கன்புசெய
நிற்பதன் றுல்நெஞ்ச மென்செய்கு
வேனிதை நிற்கவருள்
வெற்பக மேய கிளியே
வருண்மழை மின்னிடையே
கற்பக மேதெள் ளமுதேதென்
கூடற் கயற்கண்ணியே.

37. வெள்ளிப் பிறங்கலை யில்லாவில்
லாக்கொண்டு மேருவினைத்
துள்ளித் திரிவிடைச் சொக்கேசர்
வீதிக டோறுமிரந்
தள்ளிக் கொடுமென வேற்றிடு
வாரைய மாங்கதென்னே
கள்ளக் கயவர்க் கரியாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

35. இறைவன் எல்லாம் வல்ல சித்தராக எழுந்தருளியது மதுரைத் திருவிளையாடல்களில் ஒன்று. அல் ஆர் களத்தர்க்கு - விடத்தின் கருமை நிறைந்த திருக்கழுத்தை உடைய சிவபெருமானுக்கு. உல்லாசமாக - மிக்க மகிழ்ச்சியோடு. புரப்பாய் - காப்பாற்றும் பேரருள் உடையாய். "ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை மீதுன் அருகிருந்து, நீமுத்தம் தாவென் றவர்கொஞ்சும் வேளையில் நித்தநித்தம், வேய்முத்த ரோடென் குறைகளெல் லா... மெல்லச்சொன்னால், வாய்முத்தம் சிந்தி விடுமோநெல் வேலி வடிவம்மையே" என்ற பாடல் இதனோடு ஒப்புநோக்கத்தக்கது.

36. அல் பகல் - இரவும் பகலும்.

37. வெள்ளிப் பிறங்கலை இல்லாகவும், மேருவினை வில்லாகவும் கொண்டு; பிறங்கல் - மலை; இல் - இருப்பிடம். விடை - இடபம். ஐயம் ஏற்றிடுவார்; ஐயம் - பிச்சை. ஆங்கு : அசை. வெள்ளிமலையையும், மேருமலையையும் கொண்டவர் பிச்சை எடுப்பதற்கு என்ன காரணம் என்றபடி.

38. ஒண்ணுதன் மங்கையர் போர்க்கோலந்
தாங்கி யுடன்வரப்போய்
விண்ணுதல் வெள்ளி விலங்கற்
கணங்களை வென்றுபின்னும்
அண்ணுதல் செய்து சினங்காட்டி
நின்றிடு மாற்றல்கண்ட
கண்ணுத லுண்மகிழ் வென்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

39. மனையொடு மக்களு நிச்சய
மென்று மனங்கொடுன்னைத்
தினையள வேனு நினையாத
பாவியைச் சிந்திப்பையோ
வனைமறை யந்தமு மன்பர்க
ணெஞ்சமும் வாழ்மணியே
கனைகடல் சூழ்புவி யேத்துதென்
கூடற் கயற்கண்ணியே.

40. உயல்விளை யாடு மனத்தாரை
யென்று முறுதலின்றி
அயல்விளை யாடு மனவண்டுன்
பாத வலர்பற்றுமோ
புயல்விளை யாடு மிமவான்
பயந்திட்ட புத்தமுதே
கயல்விளை யாடும் வயல்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

38. ஒள் நுதல் - ஒளியை உடைய நெற்றி. விண் நுதல் - வானோர்கள் புகழுகின்ற. வெள்ளி விலங்கல் கணங்களை - வெள்ளிமலையாகிய கைலாசத்தில் உள்ள பூதகணங்களை. அண்ணுதல் செய்து - நெருங்கிச் சென்று. கண்ணுதல் - நெற்றியில் கண்ணுடைய சிவபெருமான். உள் மகிழ்வு - உள்ளத்தின்கண் மகிழ்ந்தது.

மீனாட்சியம்மை திக்குவிசயம் செய்து கைலாசத்தில் சிவ பெருமானுடைய படைகளாகிய பூதங்களை வென்று கோபம் காட்டி நின்றபொழுது, அதுகண்டு வெறுக்காமல் மகிழ்ச்சி அடைந்ததற்கு என்ன காரணம் என்பது கருத்து.

39. நிச்சயம் என்று - உறுதியான துணை என்று. மனம் கொடு - மனத்தில் எண்ணி. மறை அந்தம் - உபநிடதம். கனை - ஒலிக்கின்ற.

40. உயல் விளையாடும் - உய்யும் நெறியில் எப்பொழுதும் உலாவும். அயல் - அடியார் இல்லாத அயலிடங்களில். புயல் - மேகம். பயந்திட்ட - பெற்ற.

41. வண்டேன் முடியிம வானுக்கும்
வீர வழுதிக்கு நீ
ஒண்டே னலர்வா யெரிவாய்
மகளா யுதித்தமையால்
பண்டே யுறுமடி யார்க்கெளி
யா யெனப் பன்னுவதைக்
கண்டேனுன் பாலடி யேன்புனற்
கூடற் கயற்கண்ணியே.

42. திரையற்ற தோற்றக் கடல்வீழ்ந்து
வான்கரை சேர்தலின்றி
வரையற்ற துன்ப மடைந்தேனுக்
காரருள் வைப்பதென்றோ
உரையற்ற மாற்றுயர் பொன்னேமின்
னேரிடை யுத்தமியே
கரையற்ற வின்பக் கடலேதென்
கூடற் கயற்கண்ணியே.

43. ஏகுற்ற வென்மன வானர
முன்ற னிருகமல
வாகுற்ற பாத மலர்பற்று
மோவிம வான்மகளாய்ப்
போகுற்ற செல்வி புராதனன்
வாமம் பொருந்தனமே
காகுத்தன் சோதரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

41. இமவானுக்கு அலரினிடத்திலும், வழுதிக்கு எரியினிடத்திலும் திருவவதாரம் செய்தமையால். வண் தேன்முடி - வளவிய தேனடைகளை உடைய சிகரம். வழுதி - பாண்டியன். உன்பால் கண்டேன்; கண்டேன் - அறிந்தேன்.

42. திரையற்ற கடல், தோற்றக்கடல்; தோற்றம் - பிறவி. வான்கரை - மேலான முத்தி யென்னும் கரை. வரை அற்ற - எல்லை இல்லாத. உரை அற்ற - உரைத்தல் என்னும் செயலுக்கு உட்படாத; சாதாரணப் பொன் உரைக்கப் படுவது; அம்மையாகிய பொன் உரையற்றது. மின் நேர் இடை - மின்னலை ஒத்த இடையை உடைய.

43. ஏகுற்ற - கண்டபடி திரிந்த. வாகு - அழகு. குரங்கு மலரைப் பிய்த்து எறியுமே அன்றிப் பற்ருது என்ற குறிப்புத் தோன்றியது. போகுற்ற - திருவவதாரம் செய்த புராதனன் - பழைய பரமசிவன். வாமம் - இடப்பாகம். பொருந்தும் அன்னமே. காகுத்தன் - இராமனுக அவதரித்த திருமால்.

44. குயவாய் மகளிர் நலவாய்
நுடங்கு கொடியிடைவாய்
நயவா யுறுசெய்ய வாய்நசை
மேவுபு நான்மெலிந்தேன்
பயவாய் விழுந்து வருந்தா
வணமருள் பாலிப்பையே
கயவாய்க்கு முத்தி தருங்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

45. கூற்றுன தொன்றுண்டென் றெண்ணுது
வீணசை கொண்டுநல்லோர்த்
தூற்று வுழலுமிந் நாயேனே
யாளத் துணிவைகொல்லோ
நீற்று னிடமுறு நின்மலே
யேபன் னியமமுந்தென்
காற்றுன் மணங்கமழ் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

46. சென்னித் தலத்து மதியணிந்
தாடுஞ் சிவபெருமான்
வன்னித் திருநய னத்தான்
மதன்றனே மாய்த்ததுதான்
என்னித் திலவெண் ணகையா
யியம்புதி யென்றனக்குக்
கன்னிப் பெடையனப் பூந்தடக்
கூடற் கயற்கண்ணியே.

---

44. மகளிர் குயவாய் - பெண்களின் தனங்களில். மகளிர் என்பதை இடைநிலே விளக்காகக் கொண்டு மற்றவற்றோடும் கூட்டுக. நலவாய் - அழகில்; நலம் - அழகு. நுடங்கு - தளர்கின்ற. கொடியிடைவாய் - கொடி போன்ற இடையில். நயவாய் - மென்மையில். செய்ய வாய் - சிவந்த வாயில். செய்ய வாய் என்பது ஒழிய ஏனைய நான்கு வாய்களும் ஏழாம் வேற்றுமை உருபு. நசை மேவுபு - விருப்பத்தை அடைந்து. பயவாய் - அச்சத்தில். கயவாய்க்கு - கரிக்குருவிக்கு; சிவபெருமான் ஒரு கரிக்குருவிக்கு முத்தி கொடுத்தது திருவிளேயாடல்களில் ஒன்று.

45. கூற்றுனது - யமனுனவன்; அஃறிணையாகச் சொன்னபடி. வீண் நசை - வீணுன ஆசை. நல்லோர்த் தூற்று - நல்லவர்களே இகழ்ந்து. நீற்றுன் - திருநீறணிந்த சிவபெருமான். இடம் — வாம பாகம். பல் நியமமும் - பல தெருக்களும். தென்காற்று - தென்றற்காற்று.

46. வன்னித்திரு நயனத்தால் - நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணுல். மதன் - மன்மதன். என் - என்ன காரணம். நித்திலம் - முத்துப்போன்ற. அனப்பூந்தடம் - அன்னத்தையும் மலரையும் உடைய தடாகம்.

சிவ பெருமான் நின்னேக் காதல் செய்திருக்கவும், மன்மதனே மாய்த்தது என்ன காரணம் என்பது குறிப்பு.

47. ஆரா வமுத மனையநின்
சீரை யடிக்கடியான்
பாரா யணஞ்செயச் செய்வாய்பின்
னற்கவி பாடச்செய்வாய்
நாரா யணனுக் கருமைச்
சகோதரி நாரணிநீர்க்
காராருஞ் சோலை புடைசூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

48. ஆண மிலாத மடவோர்கள்
கூட்டத் தகப்பட்டுளக்
கோணன் மரீஇக்குலை வுற்றன
னலைய கோவென்செய்வேன்
பேண வருமருந் தேயிம்
மயக்கப் பிசாசொழியக்
காண விழைந்தனன் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

49. திருவளிப் பாய்மிடித் தீர்வளிப்
பாயெனைச் சேர்ந்தவருக்
குருவளிப் பாய்நல் லுணர்வளிப்
பாய்கவி யோதத்திறம்
மருவளிப் பாய்நன் மனமளிப்
பாய்மிக வாதைசெயும்
கருவழிப் பாய்புனற் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

47. ஆராவமுதம் - தெவிட்டாத அமுதம். பின் நாற்கவி. நீர்க் கார் - நீரை நிரம்ப உடைய மேகம்.

48. ஆணம் - அன்பு. மடவோர்கள் - அறிவற்றவர்கள். உள்ளக் கோணல் மரீஇ. பேண வரும் - அன்பு செய்தால் அருள் செய்ய வருகின்ற. மருந்தே - அமுதம் போன்றவளே. காண - நின்னைத் தரிசிக்க.

49. திரு - செல்வம். மிடித் தீர்வு - வறுமை போதல். உரு - நல்ல மேனி. உணர்வு - ஞானம். திறம் மருவ அளிப்பாய் ; மருவ - பொருந்த. மருவ அளிப்பாய் என்றது மருவளிப்பாய் என்று நின்றது, செய்யுள் விகாரம். கரு - பிறப்பு.

50. எண்ணிற் கடங்குத லின்றுற்
றுயர மிருமிடியும்
புண்ணிற் றழற்சுடு கோல்நுழைந்
தாங்குப் புகுந்தலைக்கும்
மண்ணிற் றுணையுனை யல்லாம
லாரிதை மாற்றியருள்
கண்ணிற் பருகுசெந் தேனேதென்
கூடற் கயற்கண்ணியே.

51. தீதுந் துயர்செயுங் காமாதி
யாறுமென் சிந்தைநின்று
போதும் படிக்குக் கருணைசெய்
வாய்முப் புவனமுமீன்
றேது முதுமை யுறுதுறை
கன்னி யிளமயிலே
காதும் பவப்பகை யேபுனற்
கூடற் கயற்கண்ணியே.

52. ஓயாது பாழுக் குழைத்தே
நலத்தை யொழித்துநன்னூல்
ஆயாது வீயு மடியேனைச்
சீறி யகற்றிவிடேல்
தேயா மதிமுகச் செவ்வா
யருள்விழிச் சிற்றிடையாய்
காயா மலர்நிறத் தாயேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

50. துயரம் அடங்குதல் இன்றால். இரு மிடியும் - பெரிய வறுமையும். தழல் சுடு கோல் - நெருப்பில் சுட்ட கோல். அலைக்கும் - வருத்தும். உனை அல்லாமல் துணை ஆர். இதை - இந்த நிலையை. கண்ணில் பருகுசெந்தேன் என்றது, காட்சிக்கு இனியவள் என்றபடி.

51. காமாதி ஆறும் - காமம் முதலிய ஆறு உட்பகைகளையும்; காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பன. போதும் படிக்கு - நீங்கும்வண்ணம். முப் புவனமும் ஈன்று ஏதும் முதுமை உறுது உறை கன்னி இளமயிலே; "அகிலாண்ட கோடியீன்ற, அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்தரூபமயிலே" (தாயுமானவர்). காதும் - துன்புறுத்தும். பவப்பகையே - பிறவிக்குப் பகையாக இருப்பவளே; பிறவியை ஒழிப்பவள் என்றபடி.

52. பாழுக்கு - பயனில்லாத செயலுக்கு. வீயும் - இறந்துபடும். தேயா மதி: இல்பொருளுவமை.

53. ஆவா மனத்திற் கடிமைப்பட்
டேபுல னைந்தின்வழி
ஓவா துழலு மடியேற்குன்
சேவை யுறுதலுண்டோ
நீவா வருள்புரி வாயெனப்
போற்றி னிலத்தொருவர்
காவாருண் டோமலர்க் காவார்தென்
கூடற் கயற்கண்ணியே.

54. வெங்கைக் கடகளி றன்னாரோ
ரைவர் மெலிவுறுத்தச்
சங்கைக் கரிய துயரடைந்
தேனெனைத் தாங்குதியால்
செங்கைப் பசுங்கிளித் தாயே
யடியர்கள் சிந்தையுறை
கங்கைச் சடாதரன் வாழ்வேதென்
கூடற் கயற்கண்ணியே.

55. வானேய் கரமுடை யாயென
மூடரை வாழ்த்திநொந்து
யானேய் துயரத்திற் கெல்லையுண்
டோமுக்க ணைந்தையிடத்
தேனே திசைதொறுஞ் சென்றே
யமரர்ச் செயித்தவிறற்
கானேய் குழற்குயி லேகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

53. ஆவா - அந்தோ. ஓவாது - இடைவிடாமல். சேவை - தரிசனம். போற்றின் காவாதவர் உண்டோ ; நான் போற்றியும் நீகாப்பாற்றவில்லை என்பது குறிப்பு. மலர்க்கா ஆர் - மலரை உடைய சோலைகள் நிறைந்த.

54. ஐவர் என்றது ஐம்பொறிகளை. ஐம்பொறிகளுக்குக் களிறு உவமை ; ‘‘உரன்என்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்’’ (குறள், 24). சங்கைக்கரிய - கணக்குக்கு உட்படாத.

55. வான் ஏய் - ஈகையால் மேகத்தையொத்த. யான் ஏய் - அடியேன் அடைந்த. திசைதொறும் சென்றே அமரர் செயித்த - திக்கு விசயம் செய்து தேவர்களை வென்ற. கான் ஏய் - மணம் பொருந்திய.

56. சமலனின் ருளிணை தன்னை
யுளத்திற் றரித்துறையும்
அமலரை யிம்மி யளவேனுங்
கூடி யறிந்திலனால்
விமல மடைகுவ தென்றுகொ
லோவலை மெல்லியல்வாழ்
கமல மனையகண் ணுய்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

57. தெம்முகஞ் சென்று சிறுநகை
செய்து சினந்தெரித்த
ஐம்முகன் றன்னோ டமரேற்ற
மேன்மை யறிவன்கொலோ
வெம்முக வேற்கை யறுமுகத்
தானையும் வெய்யதுதிக்
கைம்முகத் தானையு மீன்றாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

58. ஊனப் பிறவி பலகோடி
மேவி யுறுகணடைந்
தேனப் பிறவித் துயர்தனை
மாற்றிடத் தெண்டனிட்டேன்
வானப் பிறைநுத லன்னை
யிராவணன் வாழ்த்துமறைக்
கானப் பிரிய னிடத்தாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

56. சமலன் - மலத்தோடு கூடியவன். அமலரை - மலமற்ற ஞானிகளை. விமலம் - மலத்தினின்றும் நீங்கும் நிலைமை. அலை மெல்லியல் - பாற்கடலில் தோன்றிய திருமகள். அம்பிகையின் கண்ணுக்குக் கமலத்தை உவமை கூறி, அதற்கு அடையாக, 'அலைமெல்லியல் வாழ்' என்று சொன்னார்; எம்பெருமாட்டியின் ஒரு திரு விழியில் திருமகள் இருப்பதாகக் கூறுவது மரபு. அதுபற்றி இவ்வாறு சொன்னார் எனலும் ஆம்; "திருமகள் வலக்கண்...ஆகப் பெற்று...அருமை வீடளிப்பாள்" (திருவிளை. நான் மாடக்கூடலான படலம்).

57. தெவ் முகம் - பகைவர் உள்ள இடங்களில்; என்றது திரிபுரங்களை. ஐம்முகன் - தத்புருஷம் முதலிய ஐந்து முகங்களை உடைய சிவ பெருமான். மீனாட்சியம்மை திக்கு விசயம் செய்த பொழுது கயிலை சென்று சிவபெருமானை எதிர்த்ததை நினைந்து 'அமர் ஏற்ற மேன்மை' என்றார். துதிக்கை முகத்தான் - விநாயகர்.

58. ஊனப்பிறவி - குறையை உடைய பிறவி; ஊனவுடலால் ஆன பிறவி எனலும் ஆம். உறுகண் அடைந்தேன்; உறுகண் - துன்பம். நுதலை உடைய அன்னாய். மறைக்கானப் பிரியன் - சாமவேதப் பாடலில் விருப்பம் உடையவன்.

59. மட்டுறு கூந்தல் மடவார்
நயன மயல்வலையிற்
பட்டுறு நெஞ்சம் பலவிடத்
தோடுதல் பன்னவும்யான்
எட்டுணை யேனு மிரங்கா
திருந்தனை யீதழகோ
கட்டுரைத் தேனினிக் கூறேன்றென்
கூடற் கயற்கண்ணியே.

60. பேணு தவனின் றிருவடித்
தாமரை பேணியன்பு
பூணு தவனின் னடியார்க்கண்
டேயச்சம் பூண்டுமிக
நாணு தவனெனி னுந்துணை
வேறிலை நாயன்றுயர்
காணுத வாறென் கொலோகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

61. அசடர்கள் கூட்டங் கெழுமி
யவருள் ளவாவலுற
நிசமனு வேனு மிலாம
னவின்று நிதநிதமும்
வசைமிகத் தேடி மெலிந்தேனந்
தோநல் வழியறியாக்
கசடனை ஆள்வைகொல் லோகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

59. மட்டு - தேன். யான் பன்னவும் - அடியேன் பலகால் சொல்லவும்.

60. பேணுதவன் - விரும்பாதவன். நாயன் - நாய் போன்ற அடியேன். காணுதவாறு - நீ கடைக்கணித்துப் போக்காத தன்மை.

61. அசடர்கள் - அறிவில்லாதவர்கள். கெழுமி - சேர்ந்து. நவின்று - பொய்சொல்லி.

62. இரியாத தீப்பழி யெய்தின
னின்னன் பெள்ளளவும்
தரியாத பாவி யெனினும்
விடேல்விடிற் றாரணியில்
உரியா ரெவர்நின்னை யல்லாது
பின்னு முரைப்பதென்னே
கரியா னனத்த னனையேதென்
கூடற் கயற்கண்ணியே.

63. எண்ணிய வெண்ணிய வெல்லாந்
தவிரவிவ் வேழைதனைப்
பண்ணிய கூத்திவை போதுமன்
னேயினிப் பார்த்தருள்வாய்
புண்ணியர் முச்சுடர்க் கண்ணினர்
வாமத்துப் புத்தமுதே
கண்ணிய பல்வளத் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

64. ஆமனை நீரென் றுலுத்தரைப்
பாடி யவர்வசிக்கும்
மாமனை தோறும் புகுந்தே
சலிக்கும் வறியவனை
யோமனை நின்னை மணவாள
ரைக்கவி யோதச்செய்வாய்
காமனைக் காய்ந்தவர் வாழ்வேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

62. இரியாத - நீங்காத. எய்தினன் நான். தரியாத - உள்ளத்தில் கொள்ளாத.

63. தவிர - நீங்க. நான் நினைத்த இன்பங்களெல்லாம் நீங்கத் துன்பமுறும்படி நீ செய்த திருவிளையாடல்கள் போதும். வாமத்து - இடப் பாகத்துள்ள. கண்ணிய - பலரும் எண்ணி மதித்த.

64. நீர் ஆ மன் ஐ என்று உலுத்தரைப் பாடி - நீர் காமதேனு, அரசர், எனக்குத் தலைவர் என்று லோபிகளைப் புகழ்ந்து பாடி ; ஆ - காம தேனு ; மன் - அரசன் ; ஐ - தலைவன். மா மனை - பெரிய வீடு. சலிக்கும் - பயன் பெறாமல் சலிப்படையும். வறியவன் ஐயோ. மனை நின்னை - சிவபெருமானுக்கு மனைவியாகிய நின்னையும். மணவாளரை - நின் கணவராகிய சிவபெருமானையும். வறியவன் ஓதச் செய்வாய்.

65. ஓதிய துன்பங்கட் கெல்லையுண்
டோவிவை யுற்றடியேன்
நீதி யணுவு மிலாதே
யொழிந்தன னீயருள்வாய்
வேதியர்க் காதியன் வாமத்து
வாழ்விளக் கேயவுணர்க்
காதிய வேற்கர னன்னைதென்
கூடற் கயற்கண்ணியே.

66. வாய்ந்த மதுர கவிபா
டவுமவ் வளக்கவியை
ஏய்ந்த புலவ ரிடைப்பிர
சங்கம் மியற்றவுஞ்சீர்
வேய்ந்த வவர்கள்கொண் டாடவு
நீயருள் வெய்யவரைக்
காய்ந்த கருணைக் கடலேதென்
கூடற் கயற்கண்ணியே.

67. பொருத்த முறுதமிழ்ப் பன்னூலு
மாய்ந்தென்னோர் போதுநில்லா
துருத்த மறவிக் கடற்படிந்
தேயல்ல லுற்றுமிக
வருத்த மடைந்தன னற்கவி
பாடிட வாஞ்சையுற்றேன்
கருத்தை முடித்திகண் டாய்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

65. ஓதிய - நின்பால் முறையிட்ட. வேதியர்க்கு ஆதியன்: சிவ பெருமானை முதல் அந்தணனாகச் சொல்வது வழக்கு; "யாழ்கெழு மணி மிடற் றந்தணன்" (அகநா. கடவுள்); "வேதியா வேத கீதா" (தே.) அவுணர்க் காதிய - அசுரர்களைப் பொருது அழித்த. வேல் கரன் - முருகன்.

66. வாய்ந்த மதுரகவி - பொருந்திய இனிமையுடைய பாக்களை. அவர்கள் - புலவர்கள். வெய்யவரை - மகிடாசுரன் முதலிய கொடிய அசுரர்களை. அசுரர்களை அழித்தது மறக்கருணையாதலின் 'வெய்யவரைக் காய்ந்த கருணைக் கடலே' என்றார்.

67. ஆய்ந்து என் - ஆய்ந்ததனால் என்ன பயன்? ஓர் போதும் நில்லாது - ஒரு வேளையும் மனத்தில் தங்காது. உருத்த - அச்சுறுத்திய. மறவி - மறதி. வாஞ்சை - விருப்பம். முடித்தி - நிறைவேற்றுவாய்.

68. திடனார் தமிழ்மொழிப் பன்னூல்க
ளாய்ந்துந் தெளிவின்றியுள்
மடனார்ந்த வென்னை விடாதே
யுனையுமிம் மண்சுமக்கும்
படநாகம் பூண்ட பரனையும்
பாடும் படிக்கருளல்
கடனா முனக்கனை யேகூடல்
வாழுங் கயற்கண்ணியே.

69. மாவித் தகமுறு நின்றிருக்
கோல மனம்பொருந்தல்
ஓவிப் புவியி லுழல்வேனை
யாள வுறுவைகொல்லோ
வாவித் தனிப்பெரு வாளைதென்
ருற்றின் வகையுதிர்க்கும்
காவித் தடம்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

70. ஊனம் புரியும் பொறியைந்தின்
சேட்டை யொழித்துநித்தம்
மோனம் புரியும் படிக்குறு
மோவிந்த மூடனுக்கு
வானம் புரியு மலர்ப்பதத்
தாய்மது வண்டருந்திக்
கானம் புரியு மலர்ப்பொழிற்
கூடற் கயற்கண்ணியே.

---

68. திடன் - உறுதி. உள் மடன் ஆர்ந்த - உள்ளத்தில் அறியாமை நிரம்பிய. மண் சுமக்கும் பரன், படநாகம் பூண்ட பரன் என்று கூட்டுக.

69. வித்தகம் - ஞானம். ஓவி - நீங்கி. தென்தாற்றின்வகை - பல வகையான தென்னங் குலைகளை ; தென் - தென்னை. காவி - செங்கழுநீர்.

70. ஊனம் - சிதைவு. சேட்டை - குறும்பு. வானம் புரியும் - தேவலோகத்துள்ளவர் விரும்புகின்ற ; வானம் : ஆகுபெயர். வண்டு மதுவை அருந்தி.

71. சீருந் தளையுஞ் சிறந்தே
பொருட்சுவை சேரகத்தின்
நாரு நவரச மும்பெறு
பாடல் நவின்றிடுதற்
கோரு முனம்வர நீயருள்
வாய்மிசை யொண்பிறையும்
காரும் படியு மதில்சூழ்தென்
கூடற் கயற்கண்ணியே.

72. ஆவா பிறவிக் கடல்வீழ்ந்து
மாழ்கி யவலமுறீஇக்
காவா ரிலாது வருந்துமிந்
நாயைக் கடைக்கணிப்பாய்
தேவாதி தேவ ரிடத்தே
வளருந் திகழொளியே
காவார் மதுரைத் திருநகர்
வாழுங் கயற்கண்ணியே.

73. விஞ்சத் தனங்களை யீட்டிட
வாசையில் வீழ்ந்துழலும்
நெஞ்சத்த னின்னை யடுத்தேன்
புலவர்த நேரினின்று
செஞ்சொற் றமிழ்க்கவி யோதிட
வாரருள் செய்திடன்னே
கஞ்சத் தடம்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

71. சீர், தளை என்பன செய்யுளின் உறுப்புக்கள். அகத்தின் நாரும் - உள்ளத்தில் தோன்றிய அன்பும். ஓர் முனம் வர - நினைப்பதற்கு முன்னே பாடல்கள் தாமே வரும்படி. மிசை - மேலே.

72. ஆவா - அந்தோ. அவலம் உறீஇ - துன்பத்தை அடைந்து. இடத்தே - இடப்பாகத்தில். கா ஆர் - சோலைகள் நிரம்பிய.

73. விஞ்ச - மிகுதியாக. தனங்களை - பலவகையான செல்வங்களை. கஞ்சத் தடம் - தாமரைப் பொய்கைகள்.

74. பொய்யன்புல் லோர்கள் குழுவதை
நாளும் புகன்றுழலும்
வெய்யன்பொல் லாத வினைபுரி
வீணன் விழைந்தியற்றும்
குய்யன் கரிய விழிமாத
ராசையைக் கொண்டுழலும்
கையனென் றுலு மருள்வாய்தென்
கூடற் கயற்கண்ணியே.

75. விண்ணெதி ரின்பமுஞ் சும்மை
மிகுத்த விரிகடல்சூழ்
மண்ணெதி ரின்பமும் வேண்டேனின்
பாத மரைமலரை
எண்ணெதி ரெண்ணி யிருப்பே
னருளொடு மேழையின்றென்
கண்ணெதிர் தோன்றுவ தென்றேதென்
கூடற் கயற்கண்ணியே.

76. வன்னெஞ்சர் தம்மை மதித்தேநின்
பேரை மறந்துழலும்
புன்னெஞ்சன் மாதர்கள் போகத்தை
நித்தம் புகன்றவர்பாற்
சென்னெஞ்சன் மூவகைத் துன்ப
நினைத்தல்செய் யாதிருக்கும்
கன்னெஞ் சனைக்கை விடாதேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

74. புகன்று - விரும்பி. குய்யன் - வஞ்சகச் செயலை உடையவன். கையன் - இழிந்தவன்.

75. விண் எதிர் இன்பமும் - வானுலகத்தில் தோன்றுகின்ற இன்பமும். சும்மை - ஓசை. மரை - தாமரை. எண்எதிர் எண்ணி - சிந்தையில் நினைந்து.

76. புகன்று - விரும்பி. செல் நெஞ்சன்! மூவகைத் துன்பன் - ஆதியாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூன்று வகைத் துன்பங்களை உடைய அடியேன் ; இவற்றைத் தாபத்திரயம் என்பர்.

77. தண்டேன் மொழிமனே யன்னே
பிதாதமர் தம்முறவை
விண்டேன்மற் றென்றையும் வேண்டே
னிவர்தமை மேவுதலால்
உண்டே யெனிற்பெருந் துன்பமுண்
டாலென் றுறுதியதாக்
கண்டேனெஞ் சூடுநிற் கொண்டேன்றென்
கூடற் கயற்கண்ணியே.

78. நாவார நின்னே நவிலா
திருந்துபுன் ஞரியர்பால்
ஓவா திருப்பினு மிவ்வீ
ணனேயரு ளோடிங்ஙனே
நீவா வெனவழைத் தானந்த
வாரி நிறையச்செய்து
காவா யெனிற்றுணே யாவர்தென்
கூடற் கயற்கண்ணியே.

79. வாஞ தரித்திலன் மண்ணக
மேவி மருவுமின்பம்
தாஞ தரித்திலன் சாதுகை
மாந்தர்கள் சங்கமுற
நாஞ தரித்தனன் மெய்ம்மையி
தேயிங்ங னல்குகண்டாய்
காஞர் பொழில்புடை சூழுந்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

77. மனே - மனேவி. தமர் - சுற்றத்தார். விண்டேன் - நீங்கினேன். உண்டே எனின் - ஏதாவது நன்மை உண்டா என்ருல்.

78. ஓவாது இருப்பினும் - நீங்காமல் இருந்தாலும். காவாய் - பாது காவாமல் இருப்பாய்.

79. வான் ஆதரித்திலன் - சொர்க்கபோகத்தை விரும்பவில்லே. சாதுகை மாந்தர்கள் - சாதுக்கள். இங்ஙன் - இப்படி. கான் - நறுமணம்.

80. சீரினை மேவிய செந்தமிழ்
கற்றுந் தெளிதலின்றிப்
போரினை மேவிய வீணனைக்
காத்தருள் புத்தமுதே
ஆரினை மேவிய வேணியன்
வாமத் தமரனமே
காரினை மேவிய கூந்தாறென்
கூடற் கயற்கண்ணியே.

81. மெய்யாக நானவில் விண்ணப்ப
மீதிந்த மேதினிமேல்
வையா தினியென்னை நின்பாதப்
போதிடை வைத்தருள்வாய்
நெய்யார் கருங்குழன் மானே
பசுந்தத்தை நித்தமுறை
கையாயை யானனன் வாழ்வேதென்
கூடற் கயற்கண்ணியே.

82. மெச்சிப் பதிதர் செயறனை
வீண்வழி மேவலுறும்
துச்சன் றனையு னருட்கிலக்
காக்கித் துயர்களையாய்
உச்சிப் பிறையுடை யானிட
மேய வொருகுயிலே
கச்சிப் பதியிற் கரும்பேதென்
கூடற் கயற்கண்ணியே.

83. பேண வமைபுயற் கூந்தலும்
பாதிப் பிறைநுதலும்
மாண வமைகணை நோக்கமுஞ்
சாந்த மதிமுகமும்
ஏண மமைந்த வபய
வரத விருகரமும்
காண வருள்புரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

80. ஆரினை - ஆத்திமலரை. காரினை மேவிய - மேகத்தை ஒத்த. கூந்தால் - கூந்தலை உடையவளே; விளி.

81. தத்தை - கிளி. ஐ ஆனனன் - சிவபெருமான்.

82. பதிதர் - கடையவர்கள்.

83. புயல் - மேகம். கணை - அம்புபோன்ற. ஏணம் - நிலைபேறு.

84. ஆவா மிகவு மவமதிப்
பாரோ டலைந்தலைந்து
நாவாய் புலர்ந்து திரிவே
னொருவழி நண்ணச்செய்து
நீவா வெனக்கவி மாரி
பொழிந்திட நீயருளிக்
காவா திருப்பதென் றென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

85. அத்தனைக் கொன்ற வழிதகை
யாளனை யன்றருளும்
நித்தனைக் கூறிடு நீயருள்
சற்றிந்த நீசன்றன்பால்
வைத்தனை யென்னி லெனைப்பொரு
வாரெவர் மாமயிலூர்
கத்தனை யீன்ற வனையேதென்
கூடற் கயற்கண்ணியே.

86. போற்ற வறிந்தில னின்னைமுன்
னோர்கள் புகன்றதுதி
சாற்ற வறிந்திலன் றாழ
வருந்திலன் றண்மலர்கள்
தூற்ற வறிந்தில னென்னையு
மாளத் துணிகுவையோ
காற்ற லறுவளத் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

84. நாவாய் - நாவும் வாயும். புலர்ந்து - உலர்ந்து.

85. அத்தனை - தந்தையை. அழிதகையாளனை - அயோக்கியனுக்கு. இங்கே சுட்டியது மாபாதகந் தீர்த்த திருவிளையாடலை. கூறு இடும் - பங்கிட்டுக் கொள்ளும்; என்றது ஒரு பாதியில் இருந்ததைச் சுட்டியது. அருள் வைத்தனை என்னில். பொருவார் - ஒப்பவர்.

86. தாழ - வணங்க. தூற்ற - தூவ; அருச்சிக்க. காற்றல் அறு வளம் - வளப்பம் நீங்குதல் அற்ற.

87. வஞ்ச மலரு முளத்தார்கள்
கூட்ட மருவிப்பின்னும்
நஞ்ச மலரும் விழியா
ரெழிலை நயந்துதுயர்
நெஞ்ச மலருங் கொடியேனைக்
காத்திட னின்கடனே
கஞ்ச மலரும் புனற்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

88. குன்றைக் குழைத்த பரனு
ரகலங் குழைத்தருணீ
இன்றைக் கடியன் மனங்குழை
யாமைமற் றென்னையெனைப்
பின்றைப் புரப்பவர் யாவர்கண்
டாய்பசுப் பேசிடிற்றன்
கன்றைப் புரத்தல் கடனேதென்
கூடற் கயற்கண்ணியே.

89. மிடியாது மின்றி யிருப்பவுங்
கல்வி விதமனைத்தும்
வடியாது நித்தம் பெருகவுஞ்
செந்தமிழ் வான்கவிதை
ஒடியாது நித்தம் நவிலவுஞ்
செய்தெனை யுத்தமிநீ
கடியா தருள்புரி தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

87. வஞ்சம் மலரும் - வஞ்சகத்தன்மை தோன்றுகின்ற. மாதர் விழிக்கு நஞ்சம் உவமை. கஞ்சம் - தாமரை.

88. குன்றைக் குழைத்த பரனுர் - மேருமலையை[7] வில்லாக வளைத்த சிவபெருமான். அகலம் குழைத்தருள் நீ - மார்பை அணைத்தலால் நெகிழச்செய்த நீ; காஞ்சிபுரத்தில் அம்மை தழுவ இறைவன் குழைந்ததை நினைத்தபடி. குழையாமை - உருகச் செய்யாதிருத்தல். மற்று : அசை நிலை. என்னை - என்ன காரணம். பின்றை - பிறகு. புரப்பவர் - பாதுகாப்பவர். பேசிடின் - நியாயத்தைச் சொன்னால். பேசிடின், பசு, **தன் கன்றைப் புரத்தல் கடன்.**

89. மிடி யாதும் - வறுமை சிறிதும். வடியாது - குறையாமல். வான் - பெருமை. ஒடியாது - தடைப்படாமல். கடியாது - வெருமல் எனை அருள்புரி.

90. மாப்பது மாசனி தவ்வையின்
சார்பையென் மாட்டினி நீ
சீப்பதென் றேவென்றன் வல்வினை
யாய திரள்வனத்தைத்
தீப்பதென் றேநின்றன் சீரடி
யாரிடைச் சேர்த்தெனை நீ
காப்பதென் றேவருட் டென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

91. எல்லாச் செயலு முனதரு
ளாகவு மென்னையென்னே
அல்லாப்ப விட்டனை யென்செய்கு
வேனினி யையங்கொலோ
பொல்லாக் கொடுமன நின்றில
தாலருள் பூண்டமனம்
கல்லாச் சமைந்ததென் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

92. சாணும் வயிற்றுக்குப் பல்கோடி
தீமைக டாம்புரிந்து
மாணு வுலுத்தரை வள்ளன்மை
யீரென்று வாழ்த்திச்சற்றும்
நாணு துழல்கின்ற நாயேன்
படுதுய ரங்கனைத்தும்
காணு திருப்பதென் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

90. மாப் பதுமாசனி - திருமகளாகிய தாமரையில் வீற்றிருக்கும் பெருமாட்டி. தவ்வை - அவள் தமக்கையாகிய மூதேவி. சீப்பது - நீக்குவது. தீப்பது - எரிப்பது.

91. அல்லாப்ப - துன்புற. ஐயம்கொலோ - எல்லாச்செயலும் உன தருள் என்பது ஐயமோ. மனம் கல்லாய்ச் சமைந்தது என் - நின்னுடைய திருவுள்ளம் கல்லாக அமைந்தது என்ன காரணம்.

92. வயிற்றுக்கு - வயிற்றின்பொருட்டு ; வயிறு வளர்ப்பதற்காக. மாணு - பெருமையில்லாத. உலுத்தரை - உலோபியரை.

93. வன்னெஞ்சக் கள்வருக் குள்ளே
யொளித்து வழிபட்டுறு
நன்னெஞ்ச வன்பர்க்குத் தோன்றுமன்
னேயிந் நலமிலியாம்
புன்னெஞ்சத் தீய னினைந்தே
பணிந்து புகழவுநீ
கன்னெஞ்சை யாகிய தென்னேதென்
கூடற் கயற்கண்ணியே.

94. செற்றார் புரஞ்செற்ற தேவேச
னேடென்றன் சிந்தையிடை
உற்று தரவி னுறைந்தருள்
வாய்விண் ணுலகுரிமை
பெற்றானைத் தாக்கும் விருத்திரப்
பேயைப் பெயர்த்ததென்று
கற்றார் வழுத்துறுந் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

95. விரிசா கரத்தி னிடைத்துரும்
பென்ன மிகவலையும்
பரிசார்ந்த நெஞ்சை நினையே
நினைக்கப் பணித்தருள்வாய்
தெரிசாது சங்க சிரோமணி
சீறிடத் தேய்ந்துழலும்
கரிசாபந் தீர்த்தருள் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

---

93: உள்ளே ஒளித்து - உள்ளிருந்தும் அவருக்குப் புலப்படாமல் மறைந்து நின்று. நலம் இலி - நற்பண்பு இல்லாத அடியேன். கல் நெஞ்சை - கல்லைப்போன்ற நெஞ்சை உடையாய்.

94. செற்றார் - பகைவருடைய. புரம் - திரிபுரங்களை. செற்ற - அழித்த. ஆதரவின் - அன்பினால். விண்ணுலகு உரிமை பெற்றானை - தேவலோகத்தை ஆளும் உரிமை பெற்ற இந்திரனை. விருத்திரப்பேயை - விருத்திராசுரனைக் கொன்றதனால் தோன்றிய பிரமகத்தியை. பெயர்த்தது - போக்கிய தலம். வழுத்தும் - புகழும். இப்பாட்டில் இந்திரன் பழிதீர்த்த திருவிளையாடல் குறிக்கப்பெற்றது.

95. சாகரத்தினிடை - கடலின் இடையே அகப்பட்ட. பரிசு-தன்மை. சாது சங்க சிரோமணி - சாதுக்களாகிய முனிவர்களின் கூட்டத்தில் முடிமணி போன்ற துர்வாசர். சீறிட - கோபித்துச் சாபமிட. கரி - ஐராவதம். இதில் வெள்ளை யானை சாபந் தீர்த்த திருவிளையாடல் குறிக்கப்பெற்றது.

96. தாமம் வளைகுழன் மங்கையர்
கொங்கைச் சயிலநினைந்
தேம மிலேனைப் புரந்தாள
நீசிறி தெண்ணுவையோ
தேமலர்ச் சோலை மணவூ
ருறைகுல சேகரன்செய்
காமர் நகரெனுந் தென்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

97. சௌரியம் பேசி யுடல்பொரு
ளாவி சதமென்றெங்கும்
பௌரிகொ டைய கொடியேனை
யாண்டருள் பண்ணுவையோ
ஔரச ஞக வயில்வே
லனைப்பெற்ற வன்னை நலக்
கௌரிய னீன்ற மயிலேதென்
கூடற் கயற்கண்ணியே.

98. எண்களிக் குந்நின தம்புயத்
தாளினை யெண்ணியெண்ணி
மண்களிக் குஞ்சுவை சேர்கவி
பாட வரந்தருவாய்
விண்களிக் குங்கயி லைக்கிரி
நாதனை மேவிமணம்
கண்களிக் கச்செயுங் கண்ணேதென்
கூடற் கயற்கண்ணியே.

---

96. தாமம் - மலர்மாலை. சயிலம் - மலை. ஏமம். - பாதுகா[illegible]; இன்பமும் ஆம். தேமலர் - தேனை உடைய மலர். காமர் - அழகை உடைய. மதுரைமா நகரம் குலசேகர பாண்டியனுல் முதல் முதல் அமைக்கப் பெற்றது. அதற்குமுன் அவன் மணவூரில் இருந்தான். திருநகரங்கண்ட படலம் காண்க.

97. சௌரியம் - சூரத்தனம்; வீருப்பு. சதம் - நிலையானது. பௌரி : பவுரி என்பதன் போலி; சுழலுதல். ஔரசன் - முறையான பிள்ளை. கௌரியன் - பாண்டியன்.

98. எண் - உள்ளம். மண் - உலகத்திலுள்ளோர். விண் - விண்ணோர். மணம் செயும். திருமணப்படலம் காண்க.

99. சாலாத தீயரைச் சார்ந்தே
துதிபல சாற்றிநின் றன்
பாலா தரவு சிறிதுமி
லேனைப் பதைப்பவிடேல்
மேலா மமல னிரசத
மன்றில் வியாக்கிரத்தின்
காலானுக் காடி யருள்கூடல்
வாழுங் கயற்கண்ணியே.

100. கண்டோ மொழிமுலை செண்டோ
வெனமங் கையரைநிதம்
விண்டோய் விலாதுழல் வீணனை
நீகை விடேலமலாய்
குண்டோ தரன்பசி தீரவெண்
சோறு கொடுத்துணலைக்
கண்டோ விலாமகிழ் கொண்டோய்தென்
கூடற் கயற்கண்ணியே.

---

99. சாலாத - பண்பு நிரம்பாத. நின்றன்பால். ஆதரவு - அன்பு. விடேல் - விடாதே. இரசதமன்று - வெள்ளியம்பலம். வியாக்கிரத்தின் காலான் - புலிக்கால் முனிவர். அமலன் ஆடி அருள். வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலம் காண்க.

100. கண்டோ - கற்கண்டோ. விண்டு - புகழ்ந்து. அமலாய் - அமலையே. உணலைக் கண்டு - அவன் உண்ணுவதைப் பார்த்து. ஓ இலா - குறைவிலாத. மகிழ் - மகிழ்ச்சி. குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம் காண்க.

# அங்கயற்கண்ணி மாலை

(தரவு கொச்சகக்கலிப்பா)

சீறுதரு மூடர்கடஞ் சேவைகளே செய்தொழுகிப்
பேறுதரு நின்னருளைப் பேணேனை யாள்குவையோ
கூறுதரு குறட்கன்னக் குழியினொடு வையையெனும்
ஆறுதரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (1)

குன்றுவரு கொங்கையுடைக் கோதையர்கள் மேனிதொறும்
சென்றுவரு தீமைமிகு சிந்தையனை யாள்குவையோ
கன்றுவரு மானணிகைக் கண்ணுதலா லெழுகடலும்
அன்றுவரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (2)

உண்ண லுடுத்த லுறங்கன் முதலியவே
நண்ணலுறு மிக்கொடிய நாயேனை யாள்குவையோ
விண்ணடைந்தாங் கின்பநுகர் வீரன்மல யத்துவச
அண்ணல்வரு கூடனகர் அங்கயற்க ணாயகியே. (3)

குன்றுவளை மலர்க்கரத்துக் கோவையுநின் னையுமதியா
தின்றுவளைக் கரமடவார்க் கிரங்குமெனை யாள்குவையோ
சென்றுவளை புகழ்மிகுமோர் செழியனிந் திரன்முடிமேல்
அன்றுவளை யெறிகூடல் அங்கயற்க ணாயகியே. (4)

---

1. குறட்கு - குண்டோதரனுக்கு. இப்பாட்டில் குண்டோதரனுக்கு அன்னக்குழியை அழைத்த திருவிளையாடல், வையையை அழைத்த திருவிளையாடல் ஆகிய இரண்டும் வந்தன.

2. கன்று வருமான் - மான்கன்று. இச்செய்யுளில் ஏழு கடலை அழைத்த திருவிளையாடல் வந்தது.

3. விண் - சுவர்க்க பதவி. இப்பாடலில் மலயத்துவசனை அழைத்த வரலாறு வந்தது.

4. குன்று வளை - மேருவை வில்லாக வளைத்த. கோவையும் - சிவபெருமானையும். செழியன் - உக்கிரகுமாரபாண்டியன். வளை - ஓராயுதம். இதில், இந்திரன் முடிமேல் உக்கிரகுமாரன் வளை எறிந்த வரலாறு வந்தது.

கடித்தவெயி றுடைச்செங்கோற் காலன்றண் டனைகருதா
தொடித்தவற வினைமிகவு முடையேனை யாள்குவையோ
கடித்தபொழில் மேருவினைக் கைச்செண்டி னுக்கிரன்முன்
அடித்தபெரும் பொழிற்கூடல் அங்கயற்க ணாயகியே. (5)

வெங்கணர்கண் டவினையே விழைந்துன்சந் நிதியணுகா
திங்கணுக ரறக்கடைசெய் திருப்பேனை யாள்குவையோ
எங்கணரு ளெனுமுனிவர்க் கீரிருவே தப்பொருளை
அங்கணனு ரருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (6)

குயிலோ கிளியோவிக் கோதையர்கள் மாற்றமென்று
மயலே மிகுத்துழலிவ் வஞ்சகனை யாள்குவையோ
வெயிலாரும் பூணணிகள் மேவுக் கிரவரசா
அயிலோன் வருகூடல் அங்கயற்க ணாயகியே. (7)

இன்பினொடு நின்பெருமை யெண்ணியொழு குதலின்றித்
துன்பினொடு நாளகற்றுந் துன்மதியை யாள்குவையோ
வன்பினொடு மெம்பெருமான் வளைசெண்டு வேலொருசேய்க்
கன்பினொடு மருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (8)

வெயில்விடுத்த செம்மேனி விமலனொடு நினைநினைப்போர்ப்
பயில்விடுத்த முழுமுடப் பாதகனை யாள்குவையோ
மயில்விடுத்த வுக்கிரனும் வழுதியலை கடல்சுவற
அயில்விடுத்த திருக்கூடல் அங்கயற்க ணாயகியே. (9)

---

5. எயிறு - பல். கோல் - தண்டம். காலன் - யமன். ஒடித்த அறவினை உடையேன் - அறச்செயல்களை அழித்தவன். கடித்த - மணம் மிக்க. இதில் உக்கிரகுமாரன் மேருவைச் செண்டால் அடித்த வரலாறு வந்தது.

6. அறக்கடை - பாவம். எங்கண் அருள் - எங்களுக்கு அருள் செய்வாயாக. இதில் வேதப்பொருளை அருளிய வரலாறு வந்தது.

7. மாற்றம் - சொல். அயிலோன் - வேலன். இதில் முருகன் உக்கிரகுமாரனாக அவதரித்த வரலாறு வந்தது.

8. நாள் அகற்றும் - காலம் கழிக்கும். சேய் - உக்கிரகுமாரன். இதில் உக்கிரகுமாரனுக்கு வளையும், செண்டும், வேலும் கொடுத்த வரலாறு வந்தது.

9. நினைப்பார்ப் பயில் விடுத்த - நினைப்பவர்களோடு பழகுவதை விட்ட. மயில் விடுத்த - தனக்கு உரிய மயில் வாகனத்தை விட்டு அவதரித்த. அயில் - வேல். இதில் உக்கிரகுமாரன் கடல் சுவற வேல் வீசிய வரலாறு வந்தது.

முக்காலங் களுமுணரும் மூதறிஞர் தமைச்சார்தல்
எக்கால மெனநினையா திருப்பேனை யாள்குவையோ
நக்கால நுகர்ந்தபிரா னவமணியி னியலமைச்சர்க்
கக்காலம் பகர்கூடல் அங்கயற்க ணுயகியே. (10)

வெம்புபசி பிணிதாகம் வெவ்வறுமை யடைந்துன்னை
நம்புதலி லாதுழலு நாயேனை யாள்குவையோ
பம்புதிரைக் கடலதனைப் பசுபதிவே ணியினுறுநான்
கம்புதமார் தருகூடல் அங்கயற்க ணுயகியே. (11)

பாகியலு மொழிமடவார்ப் பற்றிநினைப் பற்ருது
போகியபுல் லருக்கரசாம் புன்மையனை யாள்குவையோ
வாகியல்விண் மழைதடுக்க மழைமுகில்கள் நான்மாடம்
ஆகியமுத் தமிழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (12)

பாடியலுந் தமிழ்நூல்கள் பலபடித்து மறிவின்றி
வாடியநெஞ் சகமுடைய மாண்பிலியை யாள்குவையோ
தேடியமா றனக்கரியர் சித்தரென வந்தெல்லாம்
ஆடியமுத் தமிழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (13)

தேனையுறழ் சுவைமிகுத்த செய்யுளினின் றனைத்துதியா
தேனையதி பாதகனை யீனனைநன் காள்குவையோ
மானையணி மலர்க்கரத்து வள்ளலார் கழையினைக்கல்
லானையுணப் புரிகூடல் அங்கயற்க ணுயகியே. (14)

---

10. நக்கு - மகிழ்ந்து. பகர் - விற்ற. மாணிக்கம் விற்ற திருவிளையாடல் இதில் வந்தது.

11. அம்புதம் - மேகம். இதில் நான்மாடக்கூடலான வரலாறு வந்தது.

12. பாகு இயலும் மொழி - வெல்லப்பாகு போன்ற சொல். வாகு- அழகு. இதிலும் நான் மாடக் கூடலான வரலாறு வந்தது.

13. பாடு இயலும் - பெருமையைப் பெற்ற. இதில் எல்லாம் வல்ல சித்தரான திருவிளையாடல் வந்தது.

14. துதியாதேனை - துதியாத என்னை. கழை - கரும்பு. இதில் கல்லானைக்குக் கரும்பு அருத்திய திருவிளையாடல் வந்தது.

குன்றெய்து கொங்கையுடைக் கோதையர்கட் காளாகி
இன்றெய்தும் பழியினனு யிருப்பேனை யாள்குவையோ
மன்றெய்து நடமுடையார் வல்லமணர் விடுகளிற்றை
அன்றெய்து செறுகூடல் அங்கயற்க ணாயகியே. (15)

மருத்தகுழன் மடவார்கள் வாஞ்சைமரீஇ மனமலையும்
ஒருத்தனைக்கா சினிச்சுமையா வுற்றேனை யாள்குவையோ
விருத்தன்முதல் மூன்றுருவ மேவியருட் பரனுடும்
அருத்தியுறு வளக்கூடல் அங்கயற்க ணாயகியே. (16)

வாடிமன மயங்காதுன் மலர்ப்பதத்தை யின்கவியாற்
பாடிநிதங் களித்திடுமா பயிற்றியெனை யாள்குவையோ
தேடிவரு புகழரச சேகரற்குப் பரன்மாறி
ஆடியருள் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (17)

வெஞ்சினக்கூற் றுவன்புரியும் வெந்தண்டம் மருவாதுன்
கஞ்சமலர்ச் சேவடியைக் கருதேனை யாள்குவையோ
நஞ்சினழ குறுகளத்து நம்பனொரு பெண்பழிக்கா
அஞ்சினவான் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (18)

நீண்டவிழி மங்கையரை நேசித்து நினைவணங்கா
தீண்டவறக் கடைபுரிந்தே யிழிந்தேனை யாள்குவையோ
மாண்டதிருத் தந்தைதனை மாய்த்தனையைப் புணர்ந்தோனை
ஆண்டருளுந் திருக்கூடல் அங்கயற்க ணாயகியே. (19)

---

15. செறு - அழித்த. இதில் யானை எய்த திருவிளையாடல் வந்தது.

16. மருத்த - மணமுடைய. அருத்தி - அன்பு. இதில் விருத்த குமார பாலரான திருவிளையாடல் வந்தது.

17. களித்திடுமா - களித்திடுமாறு. அரசசேகரன் - இராசசேகர பாண்டியன். மாறி - கால்மாறி. இதில் கால் மாறியாடிய திருவிளையாடல் வந்தது.

18. தண்டம் - தண்டனை. களத்து - கழுத்தையுடைய. இதில் பழியஞ்சின திருவிளையாடல் வந்தது.

19. ஈண்ட - மிகுதியாகச் சேரும்படி. அறக்கடை - பாவம். இதில் மாபாதகம் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

துங்கமுறு குருவடியைத் தொழலின்றி நாள்கழியாப்
பங்கமுறு பழிமிகுத்த பதகனையு மாள்குவையோ
புங்கமுறு குருமனையைப் போற்றாது விழைந்தோன்றன்
அங்கமறுத் திடுகூடல் அங்கயற்க ணுயகியே. (20)

இரவைநிகர் குழல்வாட்க ணேந்திழையார் தமைவிழைந்தே
உரவையகன் றலக்கணுறீஇ யொழியேனை யாள்குவையோ
பரவையமண் பதகர்விறற் பாண்டியன்மேல் விடுத்தவிட
அரவையறுத் திடுகூடல் அங்கயற்க ணுயகியே. (21)

பாவையுரைத் துனதுமலர்ப் பதம்பணித லொழிந்திந்த
நாவைவறி தேசுமக்கும் நாயேனை யாள்குவையோ
கோவைவெறுத் தேயமணக் கொடியர்விடுத் திடவந்த
ஆவையொழித் திடுகூடல் அங்கயற்க ணுயகியே. (22)

குழைத்த மனமுமலர் கொண்டு குவிகையும்
இழைத்த அருச்சனையு மில்லேனை யாள்குவையோ
தழைத்த படையைச் சவுந்தரசா மந்தனுக்கா
அழைத்த புகழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (23)

இளித்த செயலு மிழிவுடையோர்ச் சேர்ந்து
களித்த மனமுமுடைக் கள்வனையு மாள்குவையோ
ஒளித்த நிதிய முலவாக் கிழியொருவற்
களித்த புகழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (24)

---

20. புங்கம் - தூய்மை. இதில் அங்கம் அறுத்த திருவிளையாடல் வந்தது.

21. உரவை - அறிவை. அலக்கண் - துன்பம். பரவை அமண் - கடலைப்போன்று விரிந்த கூட்டமாயிருந்த சமணர்கள். இதில் நாக மெய்த திருவிளையாடல் வந்தது.

22. கோவை - பாண்டிய மன்னனை. இதில் மாயப் பசுவை வதைத்த திருவிளையாடல் வந்தது.

23. சவுந்தர சாமந்தன் - பாண்டியனுடைய சேனபதி. இதில் மெய்க்காட்டிட்ட திருவிளையாடல் வந்தது.

24. ஒருவற்கு - குலபூடணன் என்னும் பாண்டியனுக்கு. இதில் உலவாக் கிழி அருளிய திருவிளையாடல் வந்தது.

இடைந்த செயலுநனி யேக்கறவும் புல்லருக்
குடைந்த மனமு முடையேனை யாள்குவையோ
மிடைந்த வளைகடமை மெய்ப்பர மன்வீதி
அடைந்து பகர்கூடல் அங்கயற்க ணுயகியே. (25)

பொருளும் மனையும் புதல்வரும் மெய்யென்று
மருளுங் கொடிய மனத்தேனை யாள்குவையோ
தெருளுமட வார்க்கட்ட சித்தி களைப்பெம்மான்
அருளுந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (26)

படையாள் விழியவரைப் பார்த்துருகி நின்னை
உடையா ளெனமதியா துற்றேனை யாள்குவையோ
நடையாள் வளவனுக்கு நாத னருளிவிடை
அடையாளஞ் செய்கூடல் அங்கயற்க ணுயகியே. (27)

கருத்து மொழியுமிந்தக் காயமும் வேருகி
இருத்துந் துயர்க்கிடமா மீனனையு மாள்குவையோ
செருத்துன் படைபடைக்குத் தேவன் புனல்வைத்
தருத்தும் புகழ்க்கூடல் அங்கயற்க ணுகியே. (28)

பாற்றுங் கொடுமை படைத்தே யறவழியை
மாற்றுங் கொடிய மனத்தேனை யாள்குவையோ
போற்றுந் தெரிவை பொருட்டமலன் செம்பொன்மிக
ஆற்றுந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (29)

---

25. இடைந்த - நலிந்த. பகர் - விற்ற. இதில் வளையல் விற்ற திருவிளையாடல் வந்தது.

26. தெருளும் - தெளிவுபெற்ற. மடவார் - இயக்க மாதர். இதில் அட்டமா சித்தி உபதேசித்த திருவிளையாடல் வந்தது.

27. படை ஆள் விழியவரை - ஆயுதத்தைப் போன்ற விழியை உடைய பெண்களை. வளவன் - சோழன். விடை - இடபம். இதில் விடை இலச்சினை இட்ட திருவிளையாடல் வந்தது.

28. செருத்துன்பு அடை படைக்கு - போரினல் உண்டான துன்பத்தை அடைந்த படை வீரர்களுக்கு. தேவன் - சிவ பெருமான். இதில் தண்ணீர்ப் பந்தர் வைத்த திருவிளையாடல் வந்தது.

29. பாற்றும் - நீக்குவதற்குரிய. தெரிவை - பொன்னனையாள். இதில் இரசவாதம் செய்த திருவிளையாடல் வந்தது.

பாழ்த்த புறச்சமயப் பாழை யடைந்துபிறர்
தாழ்த்த வருந்தும் தமியேனை யாள்குவையோ
காழ்த்த பகையுடைய காவலனைப் பாம்புரியில்
ஆழ்த்தும் தமிழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (30)

பலவா தனைமருவிப் பற்றிகந்து நெஞ்சம்
சுலவா வுழலுமிந்தத் துட்டனையு மாள்குவையோ
உலவாநெற் கோட்டை யொருவற் கொருவனருள்
அலையார் புனற்கூடல் அங்கயற்க ணாயகியே. (31)

காமனென்ன வீனர்தமைக் கட்டுரைத்து மிக்குழலும்
தீமனத்த னாய சிறியனையு மாள்குவையோ
மாமனென வந்து வழக்குரைத்த வேணியிடை
ஆமணிவோன் மணிக்கூடல் அங்கயற்க ணாயகியே. (32)

மருளார் மனத்துன் மலரடியைப் பேணா
திருளார் குழுவோ டிணங்குமெனை யாள்குவையோ
தெருளார் வரகுணர்க்குச் சிவலோகங் காட்டியோர்
அருளாளர் வாழ்கூடல் அங்கயற்க ணாயகியே. (33)

சித்திர மென்னத் திகழ்மடவார்க் காளாகிக்
குத்திர மேய கொடியேனை யாள்குவையோ
பத்திரற்கு வீணை பரிந்தே பகைவெலுமால்
அத்திரர்வாழ் கூடனகர் அங்கயற்க ணாயகியே. (34)

---

30. காழ்த்த - முற்றிய. காவலனை - சோழனை. பாம்புரி - அகழ். இதில் சோழனை மடுவில் வீழ்த்திய திருவிளையாடல் வந்தது.

31. சுலவா - சுழன்று. ஒருவற்கு - ஒருழவனுக்கு. ஒருவன் - சிவபெருமான். இதில் உலவாக் கோட்டையருளிய திருவிளையாடல் வந்தது.

32. ஆம் - நீர்; கங்கை. இதில் மாமனாக வந்து வழக்கு உரைத்த திருவிளையாடல் வந்தது.

33. இருள் - அறியாமை. தெருள் - தெளிந்த அறிவு. இதில் வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய திருவிளையாடல் வந்தது.

34. குத்திரம் - வஞ்சகம். பத்திரன் - பாணபத்திரன். மால் அத்திரர் - திருமாலாகிய அம்பை உடைய சிவபெருமான். இதில் விறகு விற்ற திருவிளையாடல் வந்தது.

நேரலர்கட் கஞ்சியுனே நிமிடப் பொழுதேனும்
ஓரலஞய்த் தீமைமிக வுற்றேனே யாள்குவையோ
சேரலன்பாற் செல்லத் திருமுகம்பா ணர்க்கருளி
ஆரணிகோ வாழ்கூடல் அங்கயற்க ணுயகியே. (35)

நையமன நின்றனுரு நாடிப் பணிந்துதுதித்
துய்ய வறியா துழல்வேனே யாள்குவையோ
செய்யமனப் பாணர்க்குச் சேர்மழையிற் பொற்பலகை
ஐயனிடு கூடனகர் அங்கயற்க ணுயகியே. (36)

வசையாருந் தீய வழிமருவி நின்பால்
நசையாது மின்றியுறை நாயேனே யாள்குவையோ
இசைவாது வெல்லவோ ரேழைக் கருள்செய்
தசையா னுறைகூடல் அங்கயற்க ணுயகியே. (37)

உன்னே யுனதருளே யுன்ஞ தனுதினமும்
தன்னே மதித்துத் தருக்குமெனே யாள்குவையோ
மன்னே வுறச்செய்த வன்றிக் குருளேகளுக்
கன்னேயனே யான்கூடல் அங்கயற்க ணுயகியே. (38)

தேக்கிய வின்பவழி தேராது துன்பவழி
ஆக்கிய வொப்பரிய வற்பனேயு மாள்குவையோ
பாக்கிய வேனப் பறழ்களே மந்திரியா
ஆக்கிய கூடனகர் அங்கயற்க ணுயகியே. (39)

---

35. நேரலர்கட்கு - பகைவர்களுக்கு. ஓரலஞய் - தியானிக்காதவஞகி. பாணர்க்கு - பாணபத்திரர்க்கு. ஆர் அணி கோ - ஆத்திமாலேயை அணிந்த சிவபெருமான். இதில் திருமுகம் கொடுத்த திருவிளேயாடல் வந்தது.

36. இதில் பலகையிட்ட திருவிளேயாடல் வந்தது.

37. நசை - அன்பு. ஓர் ஏழைக்கு - பாணபத்திரர் மனேவிக்கு. அசையான் - சலனமில்லாதவன்; தாணு. இதில் இசைவாது வென்ற வரலாறு வந்தது.

38. மன் நைவு - மிக்க வருத்தம். வன்றிக் குருளேகள் - பன்றிக்குட்டிகள். இதில் பன்றிக்குட்டிகளுக்கு முலே கொடுத்த திருவிளேயாடல் வந்தது.

39. ஏனப் பறழ்களே - பன்றிக்குட்டிகளே. இதில் பன்றிக் குட்டிகளே மந்திரிகளாக்கிய திருவிளேயாடல் வந்தது.

நின்னூம மென்று நியம முறச்செபியா
துன்னு ரருளேவிழை வுற்றேனே யாள்குவையோ
கொன்னூருங் காரிக் குருவிக் கருள்புரிந்த
அன்னான் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (40)

காரை யுறழ்கரத்தா யென்று கசடர்கடம்
பேரை யியம்பியலே பேதையனே யாள்குவையோ
நாரை யுறமுத்தி நல்கி யருள்புரிந்த
ஆரையணி வார்கூடல் அங்கயற்க ணாயகியே. (41)

பாலவாய் மேவுதமிழ்ப் பாக்களினுன் ருள்பரவா
தேலவா யோதியரை யேத்துமெனே யாள்குவையோ
சாலவா யொருவழுதி தான்காணப் பாம்புசுலாய்
ஆலவா யாங்கூடல் அங்கயற்க ணாயகியே. (42)

வம்பெய்து கொங்கை மடவாரைப் போற்றியுனே
நம்பெய்த லில்லாத நாயினேயு மாள்குவையோ
கும்பெய்து தானேயுடைக் கோனஞ்சச் சுந்தரப்பேர்
அம்பெய்த கோன்கூடல் அங்கயற்க ணாயகியே. (43)

தேன்றேய் சுவைத்தமிழைத் தெள்ளித் தெளியாது
மான்றேய் விழியால் மயங்குமெனே யாள்குவையோ
ஏன்றே ருயர்ந்தோ ரிழிந்தோ ரெனும்பலகை
ஆன்றோர்க் கருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (44)

---

40. நியமம் - விரதம். கொன் - பெருமை. காரிக்குருவி - காரியாகிய குருவி; வலியான். இதில் கரிக்குருவிக்கு உபதேசம் செய்த திருவிளை யாடல் வந்தது.

41. ஆரை - ஆத்தி மலரை. இதில் நாரைக்கு முத்தி கொடுத்த திருவிளையாடல் வந்தது.

42. பால் அவாய் - பாலைப்போன்று. ஏலவாய் ஓதியரை - மயிர்ச் சாந்தைத் தன்னிடத்தே பெற்ற கூந்தலை உடைய பெண்களை. சால ஆய் - நூல்களை நன்ருக ஆராய்ந்த. சுலாய் - சுற்றி. இதில் திருவால வாயான வரலாறு வந்தது.

43. வம்பு - கச்சு. நம்பு - விருப்பம். கும்பு - கூட்டம். இதில் சுந்தரப் பேரம்பு எய்த திருவிளையாடல் வந்தது.

44. ஏன்றோர் - தாங்கிய புலவர்கள். பலகை - சங்கப்பலகை. ஆன்றோர்க்கு - புலவர்க்கு. இதில் சங்கப் பலகை கொடுத்த திருவிளை யாடல் வந்தது.

களித்த வுளமுங் கசடர்தமைச் சொல்வாயும்
ஒளித்த நடையு முடையேனை யாள்குவையோ
தளித்ததொடைப் பெம்மான் றருமிக்குப் பொற்கிழியன்
றளித்த புகழ்க்கூடல் அங்கயற்க ணுயகியே. (45)

சித்தநா வுடல்நின்பாற் செலுத்திவழி படலின்றி
மத்தனய்த் திரிந்திடுமிம் மாண்பிலியை யாள்குவையோ
கத்தனர் கீரனை நீர்க் கரையேற்றி யாண்டருளும்
அத்தன ருறைகூடல் அங்கயற்க ணுயகியே. (46)

இகத்தியலும் வழியிதுவென் றெண்ணும லின்பனைத்தும்
உகத்தியங்கி நாள்கழிக்க லுற்றேனை யாள்குவையோ
மிகத்தியங்கு கீரனுக்கு விமலரரு ளாலியலைந்
தகத்தியனர் நவில்கூடல் அங்கயற்க ணுயகியே. (47)

துங்கத்தார் நின்கோயில் தொண்டுசெயா துட்டருக்கிப்
பங்கத்தார்க் காளாமிப் பாவியினை யாள்குவையோ
சங்கத்தார் மாறு தணித்தே யராவணிந்த
அங்கத்தார் வாழ்கூடல் அங்கயற்க ணுயகியே. (48)

இணங்குமற வாற்றினிடை யேகாத மூடர்
கணங்குழுமி நிற்பாடக் கல்லேனை யாள்குவையோ
பிணங்குமிடைக் காடனுளப் பேதகற்றி ஆண்டவனே
டணங்கரசாய்க் கூடல்வளர் அங்கயற்க ணுயகியே. (49)

---

45. களித்த - இறுமாந்து மகிழ்ந்த. ஒளித்த நடை - மறைவாக மேற்கொண்ட தீய ஒழுக்கம். தளித்த தொடை - தேன் துளிக்கும் மாலை. இதில் தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல் வந்தது.

46. நீர்க்கரை - பொற்றமரைத் தீர்த்தத்தின் கரை. இதில் கீரனைக் கரையேற்றிய திருவிளையாடல் வந்தது.

47. இயல் ஐந்து - தமிழுக்குரிய இலக்கணம் ஐந்து. இதில் கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த வரலாறு வந்தது.

48. துங்கத்தார் - தூயவர் சேரும். பங்கத்தார்க்கு - குற்றம் உடைவர்களுக்கு. ஆளாம் - ஏவலனகின்ற. மாறு - கலகம். இதில் சங்கத்தார் கலகம் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

49. மூடர் கணம் குழுமி - அறிவிலிகளின் கூட்டத்தில் கூடி. பேது - பேதம்; வேறுபாடு. இதில் இடைக்காடன் பிணக்குத் தீர்த்த திருவிளையாடல் வந்தது.

மலைவீசு முத்தே மயிலே மரகதமே
உலைவீசு பொன்னேயென் றேதேனை யாள்குவையோ
வலைவீசி முன்ன மணந்தபெரு மானுயிரே
அலைவீசு நீர்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (50)

கந்தடருங் களியானைக் காவலனே யெனச்சிதடன்
முந்தணவித் துதித்தலையும் முழுமகனை யாள்குவையோ
மந்தணத்தைப் பெருந்துறையின் மாணிக்க வாசகப்பேர்
அந்தணருக் கருள்கூடல் அங்கயற்க ணாயகியே. (51)

நயமாக்குஞ் செஞ்சுவைப்பா நான்கினையு மூடர்கடம்
வயமாக்கி மிகவருந்திம் மாண்பிலியை யாள்குவையோ
சயமாக்கும் பரசணிந்த சம்புமுனஞ் சம்புவினை
அயமாக்கும் புகழ்க்கூடல் அங்கயற்க ணாயகியே. (52)

குன்றோடு வல்லிரும்பாங் குணமருவி யெவ்விடத்தும்
சென்றோடுஞ் சிந்தையுடைச் சிறியனையு மாள்குவையோ
மன்றோடு மன்பர்மனம் வாழ்பரமன் பரிநரியா
அன்றோடப் புரிகூடல் அங்கயற்க ணாயகியே. (53)

எண்சுமந்த செந்தமிழை எண்ணிஎண்ணித் துன்பமரீஇப்
புண்சுமந்த நெஞ்சமுடைப் புல்லியனை யாள்குவையோ
மண்சுமந்து பின்னர் வடுச்சுமந்த மாதேவன்
அண்சுமந்த கூடனகர் அங்கயற்க ணாயகியே. (54)

---

50. மலை வீசும் முத்தே - இமய மலையாகிய பர்வதராசன் தந்த முத்துப்போன்ற தாயே. இதில் வலைவீசின திருவிளையாடல் வந்தது.

51. கந்து அடரும் - கட்டுத்தறியை முறிக்கும். சிதடன் முந்து அணவி - குருடன்முன்பு சென்று. முழு மகன் - மூடன். மந்தணத்தை - இரகசியமாகிய உபதேசத்தை. இதில் வாதவூரடிகளுக்கு உபதேசித்த திருவிளையாடல் வந்தது.

52. பரசு - மழு. சம்புவினை அயம் ஆக்கும் - நரிகளைப் பரிகள் ஆக்கிய. இதில் நரிபரியாக்கிய திருவிளையாடல் வந்தது.

53. மன்றில் வாழ்வதோடு, அன்பர் மனத்திலும் வாழ் பரமன். இதில் பரிநரியாக்கிய திருவிளையாடல் வந்தது.

54. அண் சுமந்த - அண்ணுதலை ஏற்ற. இதில் மண்சுமந்த திருவிளையாடல் வந்தது.

பரசிற் சுகமருணின் பாதம் பணிந்துன்பால்
விரசற் குளந்துணியா வீணனை நீ யாள்குவையோ
வரசண் பையர்தலைவர் வந்தே சுரந்தீர்த்
தரசற் கருள்கூடல் அங்கயற்க ணயகியே. (55)

துளிக்குஞ் சுவைத்தமிழைச் சொல்லித் துதியாதே
களிக்கும் பயனறியாக் கள்வனை நீ யாள்குவையோ
தெளிக்கு மறைச்சிறுவர் தீச்சமணை மாற்றி
அளிக்குந் தமிழ்க்கூடல் அங்கயற்க ணயகியே. (56)

மறம்பயனைக் கொண்டசில மானிடரைப் போற்றித்
திறம்புமதி பாதகனுந் தீயனை நீ யாள்குவையோ
புறம்பயத்துச் சான்றும் பொருளை யழைத்த
அறம்பயனூர் கூடனகர் அங்கயற்க ணயகியே. (57)

வம்போடு நெஞ்சு மழையோடு கண்களுமாய்த்
துன்போடு பாவாற் றுதிக்குமெனை யாள்குவையோ
......................மெல்லோரும் பூசையுவந்
.............................................. (58)

---

55. பரசின் - புகழ்ந்தால். விரசற்கு - கலப்பதற்கு. வரசண்பையர் தலைவர் - மேலான சீகாழிக்குத் தலைவராகிய திருஞான சம்பந்தப் பெருமான். அரசற்கு - கூன் பாண்டியனுக்கு, இதில் பாண்டியன் சுரம் தீர்த்த வரலாறு வந்தது.

56. மறைச் சிறுவர் - ஞான சம்பந்தர், இதில் சமணரை வென்ற திருவிளையாடல் வந்தது.

57. புறம்பயம் - திருப்புறம்பயம் என்னும் தலம். சான்றும் பொருள் - வன்னியும், கிணறும், இலிங்கமும். இதில் வன்னியும் கிணறும் இலிங்கமும் சாட்சியாக அழைத்த வரலாறு வந்தது.

# கடம்பவன வல்லி பதிகம்

(கட்டளைக்கலித்துறை)

1. தூமேவு வீரந் திருஞான
மூன்றையுந் தொண்டரெல்லாம்
தாமேவு வண்ண மளிப்பாயென்
றுன்றவர் சாற்றுதல்கேட்
டேமேவு நின்சரண் சார்ந்தே
னிவற்றை யெளிதருள்வாய்
மாமேவு வானவர் வாழ்த்துங்
கடம்ப வனவல்லியே.

2. வலக்கண் டிருவிடக் கண்வாணி
நெற்றியில் வாய்த்தொளிரும்
புலக்க ணறிவு மகளென
நூல்கள் புகல்வதுகேட்
டலக்கண் விலக்குநின் றுளடைந்
தேனரு ளன்பர்கள்மும்
மலக்கண் ணடையுறு கண்டீர்
கடம்ப வனவல்லியே.

---

1. திரு - செல்வம். ஏ - பெருமை. கடம்பவனவல்லி - மதுரையில் எழுந்தருளியிருக்கும் அங்கயற்கணம்மை.

2. அம்பிகையின் வலக்கண் திருமகள், இடக்கண் கலைமகள், நெற்றிக்கண் ஞானசக்தி யென்பர். திரு - திருமகள். புலக்கண் - ஞானக்கண். அறிவு மகள் - ஞானசக்தி. அலக்கண் - துன்பத்தை. மும்மலக்கண் அடை உறுகண் - மும்மலத்தால் அடையும் துன்பத்தை. தீர் - தீர்க்கும்

3. விந்தா டவிக்கன்றி நின்பாத
தாமரை மேவுறலென்
சிந்தா டவிக்கியை யாதுகொ
லோசெக மீன்றவன்னே
சந்தா டவிசண்ப காடவி
கற்ப தருவடவி
வந்தா ரடவி பலசூழ்
கடம்ப வனவல்லியே.

4. தாயா முனக்குத் தமியேன்
குறைகளைச் சாற்றனன்றே
ஈயார் தமிழ்ச்சுவை யாயா
றிருமாந் திருப்பவர்பாற்
போயா சகஞ்செய விட்டுவிடே
லென்றன் புத்தமுதே
வாயார வாழ்த்த வருள்வாய்
கடம்ப வனவல்லியே.

5. புத்தியி லேன்விழ லுக்கிறைப்
பேனின்றன் பொன்னடிசேர்
பத்தியி லேனெனி னுஞ்சரண்
சார்ந்தனன் பார்த்தருளெண்
சித்தி தருமமிழ் தக்கட
லின்மணித் தீவகத்தின்
மத்தியில் வில்வ வனஞ்சார்
கடம்ப வனவல்லியே.

---

3. அம்பிகை விந்தமலைக் காட்டில் வாழ்வதாகக் கூறுவது மரபு; அதனால் விந்தியாசலநிவாசினி என்ற திருநாமம் அவளுக்கு உண்டாயிற்று. (லலிதா சகசிர நாமம், 336.) சிந்தாடவிக்கு - மனமாகிய காட்டிற்கு. சந்தாடவி - சந்தனவனம். கற்பதரு அடவி - கற்பகக் காடு, வந்து ஆர் அடவி பல - காற்று நிறைந்த பல காடுகள்.

4. தமியேன் - துணையின்றித் தனியாக உள்ள அடியேன்.

5. விழலுக்கு இறைப்பேன் : 'விழலுக்கு நீர் இறைப்பது' என்பது பழமொழி. அமிழ்தக் கடலினிடையே உள்ள மணித் தீவத்தில் சிந்தா மணிக் கிருகத்தில் அம்பிகை எழுந்தருளியிருக்கிறாள்.

6. ஊனர் மயறீர் வியாத
னுதிட்டிர னேங்குவிறற்
கூனர் சிலேவிச யன்னன்றி
நின்புகழ் கூறுவதற்
கியானு ரெனினுஞ் சரண்புகுந்
தேனகற் றென்குறையை
வானர் முகில்படி யுஞ்சீர்க்
கடம்ப வனவல்லியே.

7. ஆவா நினதடி யெண்ணுமல்
வீண்செய லாற்றிவெய்ய
தீவாய் விழுபுழுப் போலநொந்
தேனின்று தேர்ந்தடைந்தேன்
தேவாதி தேவ னிடத்தாய்
நினேயன்பிற் சேவைசெய
வாவா வினிதரு ளீவாய்
கடம்ப வனவல்லியே.

8. பாரிற் றருவென மாந்தரைப்
பாடிப் பயனின்றியே
தாரித்த லின்றிநின் பாலே
யடைக்கலஞ் சார்ந்தனனல்
ஏரிப் புனலன்ன பொன்னே
யருட்புய லேயமிழ்த
வாரித் தடமணித் தீவக்
கடம்ப வனவல்லியே.

---

6. ஊனர் மயல் - உடலில் பற்று வைக்கும் மயக்கம். உதிட்டிரன் - தருமபுத்திரன். கூனர் சிலே - வளேவையுடைய வில்லே. விசயன் - அருச்சுனன். விசயன்னன்றி; விரித்தல் விகாரம். யான் ஆர் - அடியேன் என்ன தகுதி உடையேன். என் குறையை அகற்று.

7. ஆவா - அந்தோ. தேவாதி தேவன் இடத்தாய் - மகாதேவனுடைய வாமபாகத்தில் உள்ளாய்; இடத்திலுள்ள தாயே எனலும் ஆம்.

8. தரு என - கற்பக மென்று. தாரித்தல் இன்றி - அமைதி பெறுவதில்லாமல். அருள் புயலே - அருள் வழங்குவதில் மேகம் போன்றவளே.

9. அன்பே யிலாதவர் செய்யுங்
கொடிய வவமதிப்பால்
துன்பே யடையு மனத்தேனை
யானத் தொடங்குவையோ
இன்பே செறிமது ராபுரி
யன்ப ரிதயமுற்ருேய்
வன்பே சமைமணித் தீவக்
கடம்ப வனவல்லியே.

10. காணிக்கை வைத்தம ரேசர்
வணங்குநின் கான்மலரைப்
பேணித் தொழுது நினைக்க
வருள்செய் பெரியம்மையே
ஆணிப்பொன் வில்லி தனக்கமிழ்
தேயகி லாண்டம்பெற்ற
மாணிக்க மேமணித் தீவக்
கடம்ப வனவல்லியே.

11. நற்றவர் கற்றவர் நாவலர்
காவலர் ஞானமிகப்
பெற்றவர் தம்முண் மகிடனைப்
போற்றவப் பேறுதனை
உற்றவ ராரவன் சென்னிநின்
ருள்பெற் றுரைக்குமல்லால்
மற்றவ ரார்சொல வல்லார்
கடம்ப வனவல்லியே.

---

9. மதுராபுரி அன்பர் - சோமசுந்தரக் கடவுள். வன்பு - வலிமை.

10. அமரேசர் - இந்திரன். ஆணிப் பொன் வில்லி - உயர்ந்த பொன்மலையாகிய மேருவை வில்லாகக் கொண்ட சிவபெருமான்; "ஆணிப் பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லி" (மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்.)

11. நற்றவர் - நல்ல தவம் புரியும் முனிவர். நாவலர் - பாப்பாடுவதில் வல்லவர். காவலர் - மன்னவர். அவன் சென்னி உரைக்கும்: மகிடன் தலையின்மேல் நின் தாள் படிதலால் அவன் பெரும் பேறு பெற்றவன் என்றபடி.

# ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. பொற்ரு மரைப்பூந் தடமுமரி
பூசித் தரிய பேறுமிகப்
பெற்ரு னெனவான் ரேரெடுத்துப்
பேசு மமலன் சினகரமும்
அற்ருர்க் குதவு மங்கயற்க
ணம்மை திருக்கோ யிலுங்கண்டோர்
உற்ருர் பாசப் பிணியறவே
யுடையா ரகில வுலகமுமே.

2. வையை நதிசூழ் தென்மதுரை
வாழு மமலன் றிருவருளால்
மெய்யை யுறுவீட் டின்பமெலாம்
மேவ லாகும் விழைநெஞ்சே
பொய்யை விழையிற் பயனெவனீ
புகலா யவனைப் பொருந்தாயேல்
வெய்யை யின்னை யுய்யைமிக
வீணே யுடையாய் விளம்பிடிலே.

---

1. அரி - இந்திரன் சினகரம் - கோயில். பாசப்பிணி அறவு உற்ருர் ; அறவு - அறுதலை.

2. மெய்யை விழை. வெய்யை - கொடியாய். உய்யை - உய்ய மாட்டாய்.

3. தாயைப் புணர்ந்து தந்தைதனைத்
தடிந்திட் டோனு மாரியன்றன்
வேயை யுறுதோண் மனைவிழைந்த
வெய்ய பாவி தானுமருள்
மேய கதைநீ கேட்டறிந்தும்
விளங்கு கூட னயகன்சீர்
தூயை யாக வுரைத்துரைத்துத்
தொழாமை யென்னே சொன்னெஞ்சே.

4. என்ன வென்ன சொற்றிடினு
மெனக்கு வசமா காதுதிரிந்
தன்ன மென்னத் தனமென்ன
ஆடை யென்ன வாவன்மரீஇத்
துன்ன வென்ன துயருற்ருய்
சோதி மதுரைச் சீர்கேட்கக்
கன்ன மென்ன புண்ணியஞ்செய்
தனவோ வுரைத்தி கடைநெஞ்சே.

5. மாயா மயமிவ் வுடலமென
மதியா தரிவை மாரைவிழைஇ
நோயா னுடங்கி வருந்தினையால்
நுவலக் கேட்டி மடநெஞ்சே
தாயா யுயிர்க்குத் தண்ணளிசெய்
தானு வேணு புரத்தலைவன்
தேயா வளமார் தென்மதுரை
சேறி நலங்கள் சேருதற்கே.

---

3. தந்தையைத் தடிந்திட்டோன் அருள் மேய காதையென்றது மாபாதகம் தீர்த்த திருவிளையாடலை. ஆரியன் - குரு. வேயை உறு - மூங்கிலைப் போன்ற. குருவின் மனைவியை விழைந்தவன் அருள் பெற்றதை அங்கம் வெட்டின திருவிளையாடலால் அறியலாம்.

4. அன்னம் - சோறு. மரீஇ - பொருந்தி. துன்ன - சேர்ந்திருந்த தனால். என்ன துயர் உற்ருய் - எத்தகைய துயரத்தை நீ இதுகாறும் அடைந்தாய். சோதி - சொக்கலிங்கப் பெருமான். கன்னம் - கர்னம்; காது.

5. விழைஇ - விரும்பி. வேணுபுரத்தலைவன் - சீகாழியில் பிறந்த ஞானசம்பந்தர். தேயா வளம் - குறையாத செல்வமாகிய அருளை. ஆர் - நிரம்பப் பெற்ற. சேறி - செல்வாயாக.

6. கூட னகரி னன்பருக்காக்
குணங்கள் கடந்த வமலனெட்டெட்
டாடல் புரிந்தா னியாவரையு
மாடல் புரிந்தான் அடியவரை
நாடல் புரிந்தான் மடநெஞ்சே
நவிலக் கேட்டி சிறிதேனும்
வாடல் புரியா திருத்தியவன்
மலர்ப்பூந் தாளை வணங்குதியே.

7. வளமார் மதுரை யரன்சீரை
வாயால் வழுத்தி யவன்பதத்துத்
தளமார் மலரிட் டருச்சித்துத்
தகைசால் துதியாற் ேறுத்தரித்தே
உளமாங் கவன்பா லுறுத்தினருக்
குறுகண் ணியாது மிலையாமால்
களமார் தீயர்ச் சேர்பாவங்
கலவார் கலப்பார் கவின்றிருவே.

8. திருவு முருவுந் திறமுமெங்குஞ்
சேருங் கீர்த்தி யோடறிவும்
மருவு மருவார் துயரமிலை
வண்மை யாவு மருவுவரால்
கருவுங் குறியுங் குணமுமுக்
காலங் கடந்தே யருவுருவோ
டருவு முருவுங் கடந்தொளிரு
மமலன் மதுரை யணைந்தவரே.

---

6. எட்டெட்டு ஆடல் - அறுபத்து நான்கு திருவிளையாடல்களை.

7. தகை - தகுதி; அழகுமாம். உறுத்தினருக்கு - பொருந்தச் செய்தவருக்கு. உறுகண்- துன்பம். களம் - கள்ளம்; வஞ்சனை. உறுத்தினர் கலவார். திரு கலப்பார் - செல்வத்தைப் பொருந்துவார்.

8. மருவார் - பகைவரால் உண்டாகும். கரு - பிறப்பு, குறி - திருவுருவம்; பெயருமாம். முக்காலம் - முக்காலமும்; உம்மை தொக்கது.

9. ஆல வாயி லமர்ந்தருளு
மமல னருளை யன்றிநெஞ்சே
சால வாயின் வேறுதுணை
சாற்றற் குண்டோ வவன்பெயரைக்
கோல வாயி னுரைத்துரைத்துக்
குறித்தே யவன்றாண் மலரிருப்பின்
சீல வாயி னருள்புரிவன்
றீர்ப்பன் றுயர மியாவையுமே.

10. செல்வக் கூட னகருறையுஞ்
சிவனைப் பணிந்து செழுஞ்சோதி
வில்வத் தளிரோ டிளமதியம்
வேய்ந்த வேணி விகிர்தனே
எல்வத் திரமைந் துடையாயெம்
மீசா வாச விதழியுள்ளாய்
மல்வக் கரையா வெனநிதமும்
வாழ்த்தி வணங்கு மடநெஞ்சே.,

---

9. சால ஆயின் - நன்றாக ஆராய்ந்தால். அவன் தாள் மலர் குறித்தே; குறித்து - தியானித்து. சீல ஆயின் - எளிமையையுடைய அன்னையைப் போல்.

10. எல் வத்திரம் ஐந்து - ஒளியையுடைய திருமுகங்கள் ஐந்து; ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன, இதழி - கொன்றை; "நறுங்கொன்றைப் போதி னுள்ளான்" (அப்பர்.) மல் வக்கரையா - வளம் பொருந்திய திருவக்கரை என்றும் தலத்தில் உள்ளவனே

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

## கயற்கண்ணி மாலை


| பாடல் | பக்கம் |
|---|---|
| அசடர்கள் | 22 |
| அண்டார்புரஞ் | 12 |
| அத்தனைக்கொன்ற | 30 |
| அற்பகனின்ற | 16 |
| அறையணி | 10 |
| அனகப்பமரன் | 10 |
| ஆணமிலாத | 18 |
| ஆமனைநீ | 23 |
| ஆராவமுத | 18 |
| ஆவாபிறவி | 26 |
| ஆவாமனத்திற் | 20 |
| ஆவாமிகவு | 30 |
| இரியாததீப்பழி | 23 |
| இன்னம்பராதி | 6 |
| உயல்விளையாடு | 15 |
| ஊனப்பிறவி | 21 |
| ஊனம்புரியு | 25 |
| எண்களிக்கு | 34 |
| எண்ணிய | 23 |
| எண்ணிற்கடங்கு | 19 |
| எண்ணினயன | 11 |
| எல்லாச்செயலு | 32 |
| எல்லாஞ்செய் | 14 |
| எல்லாவுலகு | 6 |
| ஏகுற்றவெண்மன | 16 |
| ஒண்ணுதல் | 15 |
| ஓதியதுன்பங்கட் | 24 |
| ஓயாதுபாழுக் | 19 |
| கண்டோமொழி | 35 |
| குயவாய்மகளிர் | 17 |
| குன்றைக்குழைத்த | 31 |
| கூற்றானதொன்று | 17 |
| சமலனின்றாளிணை | 21 |
| சாணும்வயிற்றுக்கு | 32 |
| சாலாததீயரை | 35 |
| சீதங்கமழு | 11 |
| சீரினைமேவிய | 29 |
| சீரும்தளையும் | 26 |
| செம்மைவள | 1 |
| செய்தவமேது | 12 |
| செற்றார்புரஞ்செற்ற | 33 |
| சென்னித்தலத்து | 17 |
| சென்னியிடை | 9 |

| பாடல் | பக்கம் |
|---|---|
| சையந்தனக்கு | 4 |
| சௌரியம்பேசி | 34 |
| தடையேனை | 1 |
| தண்டேன்மொழிமனை | 28 |
| தனிவாயமல | 7 |
| தாமம்வளைகுழல் | 34 |
| திடனார்தமிழ் | 25 |
| திருவளிப்பாய் | 18 |
| திரையற்றதோற்றக் | 16 |
| தீதுந்துயர்செயுங் | 19 |
| தெம்முகஞ்சென்று | 21 |
| நாவலன்றேழமை | 8 |
| நாவார ... சைவ | 2 |
| நாவார திருந்து | 28 |
| நிந்தனைக்கொள்கல | 4 |
| படித்தேன்படித்தவை | 3 |
| பண்ணேனெனினு | 4 |
| புவிபாலர்முன்னம் | 7 |
| புனல்வாய்பவர்சடை | 8 |
| பெரியனெவனென்னிற் | 5 |
| பேணவமைபுயற் | 29 |
| பேணாதவனின் | 22 |
| பொய்யன்புல் | 27 |
| பொருத்தமுறுதமிழ் | 24 |
| போற்றவறிந்திலன் | 30 |
| மட்டுறுகூந்தல் | 22 |
| மருவழியாத்தளிர் | 6 |
| மலையத்துவச | 7 |
| மனையொடு | 15 |
| மாட்சிபெறுகவி | 13 |
| மாணாதபுல்லர்கள் | 5 |
| மாத்தருநீழல் | 2 |
| மாப்பதுமாசனி | 32 |
| மாவித்தகமுறு | 25 |
| மிடியாதுமின்றி | 31 |
| முளைமதிவேணி | 13 |
| முற்றாதரவு | 11 |
| முன்னமதனின் | 12 |
| முனைவாய்க்கவைச்சிகை | 9 |
| மெச்சிப்பதிதர் | 29 |
| மெய்யாகநானவில் | 29 |
| மெய்யாவுரை | 5 |
| வஞ்சமலருமுள | 31 |

| பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| வஞ்சன்பிறரை | 3 | வானேய்கரமுடை | 20 |
| வண்டேன்முடி | 16 | விஞ்சத்தனங்களை | 26 |
| வரைவேந்தன் | 9 | விண்ணெதிரின்ப | 27 |
| வன்னெஞ்ச | 33 | விரிசாகரத்தி | 33 |
| வன்னெஞ்சர் தம்மை | 27 | வெங்கைக்கடகளி | 20 |
| வாய்ந்தமதுர | 24 | வெள்ளிப்பிறங்கலை | 14 |
| வாரணிகொங்கை | 3 | வேஞ்சினமாதி | 2 |
| வானுதரித்திலன் | 28 | | |


## அங்கயற்கண்ணி மாலை


| | | | |
|---|---|---|---|
| இகத்தியலு | 45 | தேனையுறழ் | 38 |
| இடைந்தசெய | 41 | நயமாக்குஞ் | 46 |
| இணங்குமற | 45 | நின்னும | 44 |
| இரவைநிக | 40 | நீண்டவிழி | 39 |
| இளித்தசெய | 40 | நேரலர்கட் | 43 |
| இன்பிறெடு | 37 | நையமன | 43 |
| உண்ணலுடுத்த | 36 | படையாள் | 41 |
| உன்னை | 43 | பரசிற்சுக | 47 |
| எண்சுமந்த | 46 | பலவா | 42 |
| கடித்தவெயி | 37 | பாகியலு | 38 |
| கந்தடருங் | 46 | பாடியலுந் | 38 |
| கருத்து மொழி | 41 | பாலவாய் | 44 |
| களித்த | 45 | பாவையுரைத் | 40 |
| காமனென்ன | 42 | பாழ்த்த | 42 |
| காரையுறழ் | 44 | பாற்றுங் | 41 |
| குயிலோ | 37 | பொருளும் | 41 |
| குழைத்தமன | 40 | மருத்தகுழன் | 39 |
| குன்று வரு | 36 | மருளார் | 42 |
| குன்றுவளை | 36 | மலைவீசு | 46 |
| குன்றெய்து | 39 | மறம்பயனு | 47 |
| குன்றேடு | 46 | முக்காலங்களும் | 38 |
| சித்தநா | 45 | வசையாருந்தீய | 43 |
| சித்திரமென்ன | 42 | வம்பெய்து | 44 |
| சீறுதரு | 36 | வம்போடு | 47 |
| துங்கத்தார் | 45 | வாடிமன | 39 |
| துங்கமுறு | 40 | வெங்கணர்கண் | 37 |
| துளிக்குஞ்சுவை | 47 | வெஞ்சினக்கூற்றுவன் | 39 |
| தேக்கிய | 43 | வெம்புபசி | 38 |
| தேன்றேய் | 44 | வெயில் விடுத்த | 37 |

## கடம்பவனவல்லி பதிகம்


| பாடல் | பக்கம் | பாடல் | பக்கம் |
|---|---|---|---|
| அன்பே | 51 | நற்றவர் | 51 |
| ஆவா | 50 | பாரிற்றரு | 50 |
| ஊனுர் | 50 | புத்தியி | 49 |
| காணிக்கை | 51 | வலக்கண்டிரு | 48 |
| தாயாமுன | 49 | விந்தாடவிக்கன்றி | 49 |
| தூமேவு | 48 | | |


## ஸ்ரீ சுந்தரேசுவரர் துதி


| | | | |
|---|---|---|---|
| ஆலவாயி | 55 | திருவுமுருவுந் | 54 |
| என்னவென்ன | 53 | பொற்றுமரைப்பூந் | 52 |
| கூடனகரி | 54 | மாயாமயமிவ் | 53 |
| செல்வக்கூட | 55 | வளமார் | 54 |
| தாயைப்புணர்ந்து | 53 | வையைநதி | 52 |

# மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் நூல்நிலைய வெளியீடுகள்

---

## 1. இலக்கியம்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1. | கம்பராமாயணம்—பாலகாண்டம், விரிவுரையுடன் | 12 | 00 |
| 2. | கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், விரிவுரையுடன் | அச்சில் | |
| 3. | கம்பராமாயணம்—ஆரணிய காண்டம், விரைவுரையுடன் | 12 | 00 |
| 4. | கம்பராமாயணம்—கிட்கிந்தா காண்டம், விரிவுரையுடன் | 12 | 00 |
| 5. | கம்பராமாயணம்—சுந்தரகாண்டம், விரிவுரையுடன் | 12 | 00 |
| 6. | கம்பராமாயணம்—யுத்தகாண்டம், விரிவுரையுடன், பகுதி-1 | 12 | 00 |
| 7. | கம்பராமாயணம்—யுத்தகாண்டம், விரிவுரையுடன், பகுதி-2 | 12 | 00 |
| 8. | கம்பராமாயணம்—யுத்தகாண்டம், விரிவுரையுடன், பகுதி-3 | 12 | 00 |
| 9. | கம்பராமாயணம்—யுத்தகாண்டம், விரிவுரையுடன், பகுதி-4 | 12 | 00 |
| 10. | சூளாமணி-குறிப்புரையுடன் | 12 | 00 |
| 11. | தக்கயாகப் பரணி—ஸ்ரீ ஐயரவர்களின் சொந்தப் பதிப்பு | 6 | 50 |
| 12. | பெருங்கதை ஷை ஷை | 16 | 00 |
| 13. | மூவருலா—பழைய உரையுடன் | அச்சில் | |
| 14. | கப்பற்கோவை—குறிப்புரையுடன் | 3 | 00 |
| 15. | நளவெண்பா—விளக்கவுரையுடன் | 5 | 00 |
| 16. | திருக்குறள்—ஒரு பழையவுரையுடன் | 4 | 00 |
| 17. | திருக்குற்றால நாதருலா | 2 | 25 |
| 18. | அகிலாண்டநாயகி மாலை—குறிப்புரையுடன் | 0 | 60 |
| 19. | சேக்கிழார்பிள்ளைத்தமிழ் | 1 | 50 |
| 20. | தமிழ்ப்பா மஞ்சரி—ஐயரவர்களின் பாடல்கள், பகுதி-1 | 2 | 00 |
| 21. | ,, ,, ,, பகுதி-2 | 2 | 50 |

## 2. இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| 22. | நவநீதப்பாட்டியல்—மூலமும் உரையும் | 2 | 00 |
| 23. | யாப்பருங்கலக் காரிகை | 4 | 50 |

## 3. சமயம்

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 24. | கமலாலயச் சிறப்பு—குறிப்புரையுடன் | 5 | 00 |
| 25. | திரு அம்பர்ப்புராணம்—குறிப்புரையுடன் | 5 | 00 |
| 26. | திருவாசக வியாக்கியானம்—அநுபூதி உரை | அச்சில் | |

## 4. கலைகள்

| | | | |
|---|---|---|---|
| 27. | பரதசேனாபதீயம்—நாட்டியம் | 1 | 25 |
| 28. | அபிநயதர்ப்பணம்—படங்களுடன் | 5 | 00 |
| 29. | மகாபரத சூடாமணி, பகுதி-1 | 10 | 00 |
| 30. | மகாபரத சூடாமணி, பகுதி-2 | 5 | 00 |
| 31. | திருக்குற்றாலக் குறவஞ்சி | 1 | 25 |
| 32. | கும்பேசர் குறவஞ்சி | 1 | 50 |

## 5. நீதி

| | | | |
|---|---|---|---|
| 33. | மநுவிஞ்ஞானேசுவரீயம் | 4 | 00 |

## 6. உரைநடை

| | | | |
|---|---|---|---|
| 34. | மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரச் சுருக்கம், பகுதி-1 | 3 | 00 |
| 35. | ஷை ஷை பகுதி-2 | 2 | 55 |
| 36. | ஐயரவர்கள் வாழ்க்கை வரலாறு | 0 | 10 |
| 37. | ஐயரவர்கள் வாழ்க்கையும் செயற்கரிய செயலும் | 0 | 40 |
| 38. | நன்மாணாக்கர் | 0 | 60 |

## 7. சுவடிகளின் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 39. | சுவடிகளின் நாமாவளி | 0 | 37 |
| 40. | முதல் 43 வரை சுவடிகளின் விளக்கம், 4 பகுதிகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10/- வீதம் | 40 | 00 |

---

குறிப்பு: கம்பராமாயணம் முழுவதும் ஒரே தடவையில் வாங்கினால் 25% கழிவு உண்டு. ஏனைய புத்தகங்கள் ஒரே தடவையில் ரூ. 15/-க்கு மேல் வாங்கினால் 20% கழிவு உண்டு.